தேவமாதா துணை.

சகல நாடகக் கம்பெனியார்களும்
பாடி நடித்துவரும்

ஞானசௌந்தரி

சென்னை : ஸ்ரீ பால விநோத நாடக சபாவின் உபாத்தியாயர்

ச. க. சங்கரலிங்கக் கவிராயர் அவர்கள் இயற்றியது.

சென்னை :
B. இரத்தின நாயகர் & ஸன்ஸ்,
வெளியிட்டது.

Copy-Right

அணா 0-12-0

Y351:43

தேவமாதா துணை

K. S. செல்லப்பா அய்யர், K. S. அனந்தநாராயண அய்யர்,
S. G. கிட்டப்பா, K. B. சுந்தராம்பாள்,
P. S. வேலுநாயர், S. R. கமலம்,
மதுரை ஒரிஜினல்பாய்ஸ் கம்பெனி,
ஸ்ரீ பால விநோத நாடக சபா
இவர்களால் நடத்திவரும்

ஞானசௌந்தரி

உடுமலை : ஸ்ரீமான் சரபகவி மாணவரும்
சென்னை ஸ்ரீ பால விநோத நாடக சபாவின் ஆசிரியருமான
சங்கீத சாஹித்திய சந்தவண்ணச் சரபம்
நாடகாசிரியர் :

ச. சு. சங்கரலிங்கக் கவிராயர்
எழுதியது.

பிரசுரித்தவர்கள் :

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,
திருமகள் விலாச அச்சு நிலையம்,
சென்னை—1.

1954

காபிரையிட்]

[விலை அணா 12.

10058

முகவுரை

தமிழ் நாடகமேடையில் நமது ஞானசௌந்தரி நாடகம் ஒன்று இது பல பெரிய நடிகர்களால் நடிக்கப்பெற்றுப் பிரகாசிக்கின்றது.

வேதமார்க்கக் கிறிஸ்துவ சகோதர சகோதரிகள் கொண்டா. டும் இக் கதை முதன்முறையாகத் தமிழ் நாடகத் தலைமை யாசிரியர் ஸ்ரீ ஜத் சங்கரதாஸ் சுவாமி யவர்களால் தமிழ்நாடக மேடைக்கு வந்த தென்பது பிரசித்தம்.

பிற்காலம் இந்நாடகக் கதானுசாரங் கெட்டு, நடிப்புத்திறமை விட்டு, நான ஆக்டரிட மகப்பட்டுத் திண்டாட்ட மாடுகின்றது. அந்தோ! என்னே நமது நாடகமேடையின் தற்கால மகிமை.

குருவாய் மனதிற் குடிகொண்டிலகும் எனது சரபகவிப் பெருமான், உலகம் புகழ் உடுமலை ஸ்ரீஜத் உ. முத்துசாமி கவிராயரவர்களின் ஆசீர்வாதப் பெருக்கால், நாடகாசிரியனென முன்வந்த யானும், தற்கால ரசிகமாக இக்கதையை எழுதி, ஆரியபாலகான சபா, ஸ்ரீ பாலவிநோத நாடக சபா என்னும் இருசபையின் பாலியர்கள் மூலம் இந்நாடகத்தை நடத்தி நற்பேறு பெற்றதறிந்த நம்மபிமானிகள் கோரியவண்ணம் இக்கதையை அச்சியற்றி வெளியிடலானேன்.

இந்நாடகத்தை நடத்தும் பிரதி நடிகரும், இதனது கதானுசாரங் கெடாது, அவ்வதற்கெற்ற சீன்களையும், உடுபாவனைகளையும், தயாரித்து நடத்துவார்களாகில் நற்பேறு பெறுவர் என்பதுண்மை.

ஆகவே, இதற்குமுன் அச்சுவாகனமேறி வெளிவந்த எனது நாடகங்களை அபிமானித்த அன்பர்கள் பலரும் இந்நாடகப் புஸ்தகத்தின் வரவேற்பை எதிர்நோக்கக் கோருகிறேன்.

அன்றியும், இந்நூலின் சகலஉரிமைகளையும், சென்னை: மெஸர்ஸ் B. இரத்தின நாயகர் அண்டு ஸன்ஸ் அவர்களுக்கே உரியதாதலின், மற்றவர்கள் இப்புத்தகத்தையேனும், இதிலுள்ள பாடல்களையேனும் அச்சிட்டு வெளியிடில் புத்தக ரிஜிஸ்டர் சட்டப்படி சகல நஷ்டத்திற்காளாவார்களென்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

8-1-49 }
சென்னை. }

அன்பன்:
கவிராஜ் ச. சு. சங்கரலிங்கன்.
நாடகாசிரியன்.

Copy Right and Rights of Translation in any other Languages, are reserved by the Publishers.

நாடக நடிகர்கள்

தர்மராஜன்	ரோமாபுரிக்கரசன்
லேனாள்	ஷை இளைய மனைவி
ஞானசௌந்தரி	ஷை முதல் மனைவி குமாரி (கதாநாயகி)
பிலேந்திரன்	சிமியோன் மகன் ஞானசௌந்தரி கணவன்
சிமியோன்	எகிப்துதேசத்தரசன்
மதளை	ஷை மனைவி
சுல்த்தான்	துருக்கிதேசத்தரசன்
தேவமாதா	உலகரட்சகி
முனீஸ்வரர்	ஓர் துறவி
சம்மன்ஸ்கள்	தேவமாதாவின் தூதர்கள்
பாதிரி	மதோபதேசிகர் (புரோகிதர்)

மந்திரிகள், குடிஜனங்கள், மழுவர்கள், தூதர்கள், காவலர், போர்வீரர், தோழிமார்கள், வேடர் முதலியோர்

நாடகம் நிகழுமிடம்:—

ரோமாபுரி, எகிப்து, அடுத்த, பிறதேசக் கானகம்.

தேவமாதா துணை

ஞானசௌந்தரி

காப்பு - விருத்தம்

புண்ணியமிலகும்ரோமா புவியரசாளுந்தர்மர்
தன்மகளானஞான சௌந்தரிநாடகத்தை
பண்ணமர்தமிழிற்பாடப் பரமசௌபாக்யவேதத்
துண்ணொளிர்தேவமாதா உயர்திருவடிகள்காப்பாம்.

சீன்—1. இடம் :—தர்பார்.

நடிகர்;—தர்மராஜன், மந்திரிகள், குடிகள், டான்ஸ், லேடிகள்.

[சகலரும் சபையிலிருக்க திரைமறைகிறது
எல்லோருமெழுந்து பாடுகின்றனர்]

பாட்டு

(ஆதிதேவனும் என்ற மெட்டு)

தேவ தேவனே திகழும் பராபரனே
தினமுனைத்துதி செயுமெமததி
பதியுலகினில் நிலவியசுக (தேவ)

தீனரட்சகா ஜேசுநாதா
திருவருள்தா சிறுவரெமதுசுபிதா
ஜெபதபமணி வரமருள்தனி
முதலெனுங்கனி வுலகுலவுநீ (தேவ)

[சகலரும் ஆசனத்தமர்கின்றனர்]

தர்மராஜ் வசனம்;—மந்திரியா! சர்வஜீவ தயாபரவஸ்துவின் கிருபையால் நமது செங்கோல் வரம்பிற்குட்பட்ட ரோமாபுரியின் தேச விசேஷங்களை இன்றைய தர்பாரில் விசாரித்தறியவேண்டும்.

மந்திரி வசனம்:—மகா பாக்யாதிபதி! சக்ரவர்த்தி தங்கள் இஷ்டத் துக்கிணங்க காத்துக்கொண் டிருக்கிறோம். தெரியவேண்டிய விஷயங்களைத் தெரிந்துக்கொள்ளலாம்.

தர்மராஜ் பாட்டு

(பாரினிலேபுகழ் என்ற மெட்டு)

சேவகசிப்பந்தி செலவதுசரியா தேசாதி கார்ய (சேவ)

ஆவலுடன்பதி லேயுரைசெய்குவீர்
அந்தமிருந்த சுமந்திரிமார்களே (சேவ)

வ-ம்:—அரசாங்க உத்தியோகஸ்தர்கள் மற்ற சேவக சிப்பந்திகளான ஏவலாளிகளின் செலவு கணக்குகளும் அவர்களது காரியாதிகளும் நீதியா யிருக்கின்றதா.

மங். வ-ம்:—அரசே! அரண்மனைப் பொக்கிஷ வரவு செலவும் உத்தியோகஸ்தர்களின் வரம்பும் வேலையாட்களின் பணிவிடையும் திருப்திகரமா யிருக்கிறது.

தர்மராஜ் பாட்டு

(ஏதுகாரியமதாக என்ற மெட்டு)

ஆரபாரரண சூரரான போர்
வீர ராதியர்கள் க்ஷேமமா
அந்தரங்க அரசாங்க சங்கதிகள்
எந்த தன்மையதை சொல்லுவீர்

வ-ம்:—ப்ரதான், போர்வீரர்களது போர்த்தொழிலும் சேனைசைன்ய பாதுகாப்பும் தளகர்த்தர்களின் ஊக்கமும், அரசாங்க அந்தரங்கக் காரியதரிசிகளின் திறமையும் ஒழுங்கா யிருக்கின்றதா.

மங். வ-ம்:—ஐயனே சேனுதிபதிகளும் சேனை சைன்யங்களும் அவர்களது யுத்தமுறையும் குறைவின்றி அபிவிருத்தியாகவே யிருக்கிறது அரசாங்க அந்தரங்கக் காரியதரிசிகளின் வேலைக்கும் பழுதில்லை.

தர்மராஜ் பாட்டு

(தேகத்தினில்வலி என்ற மெட்டு)

வாரப்பகுதிகள் மாதப்பகுதிகள்
வருஷப் பகுதிகள் வருகிறதா
நேரத்தினில்பதி லேசெப்பிடுமதி
நேர்மைச் செயல்புரி மந்திரிகளே

வ-ம்:—சிற்றரசர்களின் வருஷப் பகுதிகளும் பிரஜைகளின் மாதப் பகுதி வாரப்பகுதிகளும் முறைப்படி வருகின்றதா? தேச மகா ஜனங்களின் வேளாண்மை வியாபாரத்திற்குக் குறைவில்லையே.

மங். வ-ம்:—ப்ரபு! காலாகாலத்தில் கட்டும் பகுதிகள் சட்டதிட்டப்படி வசூலாகி வருகிறது. வேளாண்மைக்கும் வியாபார விருத்திக்கும் யாதொரு குறைவுமில்லை.

தர்மராஜ் பாட்டு

(நல்லகாலம் என்ற மெட்டு)

நல்லது நல்லதுநம் மரசாங்க
ஞாயமுறை செயுந்தலத்திலே
சல்லியமின்றி வழக்குகள் தீர்ப்பதை
சாற்றுவீ ரென்முனி க்ஷணத்திலே

வ-ம்:—நமது! நியாய ஸ்தலங்களின் அதிகாரிகள் பிரஜைகளின் வழக்குகளை பாரபக்ஷமின்றி விசாரிக்கின்றனரா? அன்றியேதேனும் அதிருப்தி யுண்டா.

மந். வ-ம்:—மகராஜ் நீதிமன்றத் தொழிலாளரின் உத்தியோக மகிமையும் அவர்களது பரிபாலனமும் அரசாங்கத்துக்கு நற்புகழையே கொடுத்து வருகிறது. நாங்களும் சமயமறிந்து வழக்குகளைப் பரிசோதித்து வருகிறோம்.

தர்.வ-ம்:—நல்லது! குடிமகாஜனங்கள்பேட்டியைக்காணவிண்ணப்ப மனு அனுப்பியதாகத் தெரிவித்திருந்தீர்களே? இன்றைய தர்பாருக்கு வந்திருக்கின்றனரா.

மந். வ-ம்:—வாயலில் காத்துக்கொண் டிருக்கின்றனர். (சேவகனைப் பார்த்து)

வ-ம்:—அடே காவலா! சமுகப்பேட்டிக்குக் காத்திருக்கும் குடிமகா ஜனங்களைக் கூட்டிவா.

[சேவகன் உட்சென்று அழைத்து வருகிறான்.]

குடிஜனங்கள். வ-ம்:—அரசே! நமஸ்கரிக்கின்றோம்.

தர். வ-ம்:—சந்தோஷம் ப்ரஜைகாள் உங்களது விண்ணப்ப மனுவின் விஷய மென்ன?

குடிஜனங்கள் பாட்டு

(மரகதமயிலேறி என்ற மெட்டு)

எங்களைக்காக்கும் இறைவரேகேளீர்
என்னவென் றுரைப்போம் அந்நீதமிதனை
தங்கம்போல்விளையும் பயிர்களழிந்து
தயங்கிடலானோம் தரணியின்மேலே (எங்)

வனத்தினில்வாழும் மிருகங்கள்கோரம்
வளரும்பயிரை அழிக்கும்விசாரம்
பனத்தினில்சகிக்க வில்லையபாரம்
வருவீர்வேட்டைக் கிதுவேநேரம் (எங்)

வ-ம்:—மகாராசா! எங்க விவசாயமெல்லாம் பாழாய்ப் போச்சுங்கோ. கோதுமை விளைவே கிடையாதுங்கோ. கர்த்தர் கிருபையால் மழை தண்ணிக்குக் குறைவில்லிங்கோ. காட்டு மிருகங்கோ விவசாயங்களை அழிச்சுப்பூடுசுங்கோ. எத்தனை நாளைக்கிக் கண்விழித்துக் காவல் செய்ரதுங்கோ. துப்பாக்கிபாஸ் கிடையாதுங்கோ. இருந்தாலும் ஒண்ணு ரெண்டு பண்ணிங்களை சுட்டுப் போடுவோம். மவராஸா மனசு வைக்கணுங்க. அந்த வேட்டைக்காரன்களுக்கு உத்தரவு போடுங்க. தயவு செய்யணுங்கோ. ஏழைங்களே காப்பாத்தணுங்கே.

தர்மராஜ் விருத்தம்

சிந்தையேவருந்திவந்த சீலரேதேசத்தோரே
நிந்தையேபுரியும்பன்றி நீள்வேங்கைகரடிமற்றப்
பந்தமேநிறைந்தகாட்டில் பாய்ந்திடுமிருகந்தன்னை
விந்தையாய்வேட்டையாடி விசனத்தைவிலக்குவேனே.

வ-ம்:—ப்ரஜைகாள்; வருந்த வேண்டாம்; இன்றையத் தினமே வேட்டைமார்க்கம் போகிறேன். துஷ்ட மிருகங்களை வதைத்து உங்கள் கஷ்டத்தை யகற்றுகிறேன் இம்முறை உங்களை கிஸ்தி கேட்காதிருக்கவும் அதிகாரிகளுக்கு அறிக்கை செய்வதுடன் உங்களுக்கு வேண்டிய தானியங்களையும் கொடுக்கச் சொல்லுகிறேன். சந்தோஷமாகச் செல்லுங்கள் பரம பிதா வானவர் உங்களைப் பாதுகாப்பார்.

[குடிமகா ஜனங்கள் போகின்றனர்.]

மந்திரியா! இனி தர்பார் கலையலாம். வேடர்களையும் வேட்டைமேற் பிரியமுள்ள போர்வீரர்களையும் ஆயுதங்களுடன் காட்டுக்குப் போகும்படி கட்டளையிடும் எனது பிரயாண பேரிகை முழக்கி வையும், (போகிருன்)

(சீன் முடிவு)

சீன்—2. இடம்:—ராஜமாளிகை.

நடிகர்:—லேஞள், தர்மராஜன், ஞானசவுந்தரி.

[லேஞள் சோபாவில் அமர்ந்து வாசித்துக்கொண்டிருக்கிருள். தர்மராஜன் வரவுகண் டெழுந்துவந்து]

லேஞ. வ-ம்:—நாதா நமஸ்காரம்! இன்றைய தர்பாரில் விசேஷமென்ன? பிரயாண பேரிகை சபதங் கேட்டதே.

தர். வ-ம்:—காதலி! இன்றுநான் ஆரண்யப்ரயாணம் செய்யப்போகிறது தெரிந்து பேரிகைமுழக்கியிருப்பார்கள். லேஞ இப்படிவா;

தர்க்கம்

(மானேமயிலே என்ற மெட்டு

தரு. மாதே எனதோர் மனமா ரமுதே
மதியே நானிது ததியுனக்குமே
வார்த்தை சொல்வதைக் கேட்டிடுவாயடி (மாதே)

லேன. ஏது எனதிடஞ் சூதுநினைவது
யேனுமதுசொலை மறுப்பேனே நான்

தரு. ஏடாகூட. மேயிதிலிலையடி
இயம்புவேநீ தயங்கிடாது
கேட்டிடு (மாதே)

லேன. வ-ம்:—ப்ராணேசா! தங்கள் வார்த்தைக்கு நான் எந்த சமயத்திலாவது தடுத்துச் சொன்னதுண்டா? என் மனவுண்மையறிந்த தாங்கள் இவ்வித சந்தேகங் கொள்ளலாமா?

தர். வ-ம்:—காதலி! சந்தேகமொன்றில்லை; விஷயமப்பேர்ப்பட்டது. ஆதலின் முதலில் உன் மனக்குறிப் புணர்ந்து விவரிக்கலாமென்று எண்ணினேன்.

லேன. வ-ம்:—எதுவிஷயமானாலும் தாராளமாக விவரிக்கலாம்.

தருமர் விருத்தம்

நாட்டில்வாழ்குடிகளிட்ட நற்பயிர் தனையேபொல்லாக்
காட்டில்வாழ்மிருகக்கூட்டங் கவிழ்ந்துவந்தழித்தசேதி
கேட்டதுமன்னனின்றே கெடிமிகும்வெடி குண்டோடு
வேட்டையேயாடிவாரேன் விடையதுதருவாய்பெண்ணே.

லேன. வ-ம்:—இதற்காகவா இத்தனை வார்த்தை? இது முக்கிய விஷயமென்பது எனக்குத் தெரியாதா? வேட்டைமார்க்கம் செல்ல விடை கொடுக்க மறுப்பேனா? சந்தோஷமாகச் சென்று குடிஜனங்களின் குறையைத் தீர்த்து சீக்கிரம் வாருங்கள்.

தர். வ-ம்:—பெண்ணமுதே! சென்றுவரத் தடையில்லை. ஆயினும், ஓர் முக்கிய விஷயம் உன்னிடம் சொல்லிப்போகவேண்டும். அதாவது! நம் குழந்தை ஞானமிருக்கின்றாள் நிமிஷநேரமும் என்னைவிட்டுப் பிரியாதவள். மேலும்,

பாட்டு

(கண்மணியே தண்ணமுதே என்ற மெட்டு)

தாயற்றதோர் பிள்ளைகோபம் வாயைவிட்டழுதால் பாபம்
தானவளை கியானமுடன்
மானினியே பார்த்திருப்பாய்

லேனாள் பாட்டு

(ஷை மெட்டு)

சேயில்லாதமங்கை நானே
செய்வேனோதீங்கேதும் தானே
செப்புமொழி தப்பிடேன்யான்
இப்பொழுதே போய்வருவீர் (சே)

லேனு. வ-ம்:—காதலா! எனக்கும் அதைவிட வேறு குழந்தை கிடையாது. பெற்றதாயைவிட பத்துபங் கதிகமாகவே ஞானத்தைப்பார்த்துப் பாதுகார்த்து வருகிறேன். என் குணனுபவம் தெரிந்த தாங்கள் இவ்விதம் சந்தேகிக்கலாமா? என்பிள்ளை வேறு, என் சக்களத்திப் பிள்ளை வேறு?

தர். வ-ம்:—லேனு! உன்மீது குற்றம் சொல்லவும், குழந்தையை நீ பாதுகாக்கமாட்டாயென்று குறைகூறவும்வரவில்லை. அவளோ அறியாச் சிறுமி. அதிலும், தாயில்லாதவள் விளையாட்டுப் பருவம் ஆகவே,

பாட்டு

(ஷை மெட்டு)

குற்றமவளே செய்தாலும்
கோபமாயுனை வைதாலும்
கொண்டணைத்து எந்தனரும்
குழந்தைதன்னைப் பார்த்திருப்பாய் (குற்)

லேனாள் பாட்டு

பெற்றபிள்ளை குற்றம்செய்தால்
பேசுவது நியாயமாமோ
உற்றபிள்ளை தானவளே
ஒன்றுக்கும் அஞ்சாமல்செல்வீர் (பெ)

லேனு. வ-ம்:—நான் பெற்ற பிள்ளையே எனக்குப் பலவித குற்றங்கள் செய்தாலும் அதைப் பாராட்டுவேனு? அதுபோல் இவளது குற்றத்தைப்பொறுக்காமல் நான் என்னசெய்யப்போகின்றேன். அவள் தாய் இறந்ததுமுதல் தாங்கள் அவளை விட்டுப் பிரியாததை முன்னிட்டு என்மேல் சந்தேகங்கொண்டு பலவிதம் பேசுகின்றீர்கள். நாதா! குழந்தையைப்பற்றிய கவலைவேண்டாம். கர்த்தாறிய மகளை மாறுபாடின்றி காப்பாற்றுவேன்.

தர். வ-ம்:—உனது உத்தமகுணம் தெரிந்ததே. எனினும் எச்சரிப்பது நன்மையென்றெண்ணிச் சொன்னேன். வருத்தம் வேண்டாம். குழந்தை எங்கிருக்கின்றுள் அழைத்துவா.

லேஞ. வ-ம்:—அம்மா ஞானசவுந்தரி! ஞானம்!

[ஞானம் மேல்மாடியிலிருந்து என் என்று கேட்டுக்கொண்டே ஓடிவருகிருள்]

ஞான. வ-ம்:—அப்பா! அப்பா! எப்பவந்திங்க. ஏனப்பா! தர்பாருக்கு போகலேயோ?

தர். வ-ம்:—கண்ணே! தர்பார் வேலேயை முடித்துக்கொண்டுதான் வந்தேன். அதிருக்கட்டும்; உபாத்தியாயரிடம் போகவில்லேயாமே? அங்கு போகாமலிருக்கலாமா?

ஞான. வ-ம்;—இல்லப்பா! என்னே யாரும் வந்து கூப்பிடவில்லே; நானும் போகவில்லே.

[லேஞள் தனியாக நின்று]

லேஞ. வ-ம்;—அடி பாவிமகளே! தகப்பனிடத்தில் தளுக்செய்கிருளே? அடடடா என்ன சாகஸமாய் கொஞ்சுகிருள். ஆகட்டும்; ஆகட்டும்.

தர். வ-ம்:—இனி அவ்விதம் செய்யாதே. தினமும் உபாத்தியாயரிடம் சென்று பாடங்களே படித்துக் கல்வியைக் கற்றுக்கொள்.

ஞான. வ-ம்:—பாடமெல்லாம் படிச்சுட்டேனப்பா!

தர். வ-ம்:—குழந்தாய்; என்னென்ன பாடம் படித்தாயம்மா?

ஞா வ-ம்:—பாம்புபாடம், பசுவுபாடம், அணில்பாடம் படிச்சேன். ஏணி பாடம் படிச்சுவர்ரேன்.

தர். வ-ம்:—நல்லது, அம்மா ஞானம்! இன்றையதினம் நான்,

பாட்டு

(லாவணி மெட்டு)

வீட்டைவிட்டேகிநான் வேட்டையாடிவருவேன்
விளேயாடி சிற்றன்னே யுடனிருப்பாய்
வேளேமனமகிழ்ந்து தாயுடனேஇருக்க
விசனமிலாதெனக்கு விடையளிப்பாய்

தர். வ-ம்:—குடி மகாஜனங்களின் விண்ணப்பத்தை முன்னிட்டு இன்றையதினம் வேட்டைக்கு சென்று இரண்டொருநாளில் திரும்பி வருகிறேன். நான் வருமளவும் உன் சிறியதாயுடன் இங்குதானிரு.

ஞானசௌந்தரி பாட்டு

(ஷை மெட்டு)

என்னுடையப்பரேவும்மைப் பிரிந்துநான்
இங்கிருக்கேனேயா தந்தையரே
தன்னுடன்கானகம் வந்துஇங்கேவரத்
தான்நினேத்தேனேயா தந்தையரே

தர். வ-ம்:—என்ன? என்னுடன் கானகத்துக்கு வரப் போகின்றனையோ?

ஞா. வ-ம்:—ஆமாமப்பா.

தருமர் பாட்டு

(ஷை மெட்டு)

கானகமிருக மானதைக்கண்டால்
கலங்குமேவுன்மனங் கண்மணியே
நான்வருமளவுந் தானகமகிழ்ந்து
நாயகியோடிருப்பாய் கண்மணியெ

ஞானசௌந்தரி பாட்டு

(ஷை மெட்டு)

சிற்றன்னைகோபஞ் செய்குவாளிருக்க
சித்தமிறங்கேனையா தந்தையரே
குற்றஞ்சொல்லாதீர் விட்டுச்செல்லாதீர்
கூடவருவேனையா தந்தையரே

ஞா. வ-ம்:—அப்பா; உங்களுடன் நானும் வருகிறேன். இங்கிருக்க மாட்டேன். அழைச்சுட்டு போவாப்போனு பள்ளிக்கு போக மாட்டேன்.

தர். வ-ம்:—ஞானம்! சிங்கம் புலி கரடி சிறுத்தை யானை முதலிய கொடிய மிருகங்களைக் கண்டு பயமடைவாய். கானகவேட்டையில் உன்னைப் பாதுகாப்ப தெவ்விதம். இவ்விடத்தில் உன் சிறியதாயுடன் விளையாடிக்கொண்டிரு, அதிவிரைவில் வந்து விடுகிறேன்.

ஞா. வ-ம்:—அப்பா! என் புஸ்தகத்தில் புலி யானை இது எல்லாம் இருக்குது. நானு பார்த்துப் பயப்படவில்லை. அழைச்சுட்டுப் போப்பா.

தர். வ-ம்:—பிரியே லேனு! குழந்தை சொல்வதைக் கவனித்தாயா.

லே. வ-ம்:—நாதா! அறியாப்பிள்ளைதானே அவளுக்கென்ன தெரியும். தங்கள்மீதுள்ள பாசத்தால் பிரிய மனமில்லாமல் பேசுகிறது.

தர். வ-ம்:—அம்மா ஞானம்! புஸ்தகத்தில் இருப்பது மிருகங்களைப் போன்ற அச்சுப்பதுமைதான். அவைகளை உயிருடன் காட்டில் காண்பையாகில் உன் கர்ப்பம் கலங்குமே வேண்டாமம்மா. இங்குதானிரு.

[ஞானம் சைகையால் தர்மராஜனைத் தனித்தழைத்தது]

ஞானசௌந்தரி விருத்தம்

பெற்றஎன்தாயில்லாத பிள்ளையாமெனக்குவந்த
சிற்றன்னைஎன துவாஞ்சை தெரிந்துபசரிக்காளையா
வெற்றிசேர்வேட்டையாடும் விலங்கினக்கூட்டங்காண
உற்றவும்முடனேவாரேன் வுடனழைத்தேகுவீரே.

ஞா. வ-ம்:—அப்பா! சின்னம்மா என்னைக் கோபிப்பாள் வேலையிடுவாள் அடிப்பாள் எனக்கு இங்கு தங்களை விட்டுப் பிரிந்திருக்க மனமில்லை. உடன் வருவேனப்பா கூட்டிப்போங்களப்பா.

தர். வ-ம்:—ஞானம்! இதென்ன பிடிவாதம் பேசுகிறாய். அவளாலுனக்கு யாதொரு கெடுதியும் நேராது. அம்மா நான் சொல்வதைக் கேள்.

தர்மர் விருத்தம்

சத்தியந்தருமம்மேன்மை தயைவிசுவாசம்பக்தி
நித்தியநேமநிஷ்டை நிஜவார்த்தைதவறிடாதாள்
உத்தமிவுன்சிற்றன்னை வுனக்கொருகெடுதிசெய்யாள்
சத்தியஜேசுநாதன் தனைப்போற்றிஇருப்பாயம்மா.

தர் வ-ம்:—குழந்தாய்! என் வார்த்தையைத் தட்டாதே, சிற்றன்னை மெத்த பக்தியுடன் உன்னைப் பாதுகாப்பாள். கர்த்தர் கிருபையால் சுகமாயிருப்பாய் நான் சென்றுவருகிறேன்.

[ஞானத்தின் கையைப் பிடித்து லேனாவிடம் கொடுத்து]

தர். வ-ம்:—கண்ணே லேனா! என் உயிரினுமினிய இக்குழந்தையை உனது கைவசம் ஒப்புவித்தேன் காப்பாற்ற வேண்டும். வேட்டைமுடித்து விரைவில் வருகிறேன்.

லேனா. வ-ம்:—நாதா! சந்தேகம் வேண்டாம், சஞ்சலமின்றி சந்தோஷமாகச் சென்றுவாருங்கள். (போகின்றனர்)

(சீன் முடிவு)

சீன்—3. இடம்:—லேனாள் விடுதி

நடிகர்:—லேனாள்

லேனா. வ-ம்:—உலகத்தில் பெண்ஜென்மமே கேவலமானதென்று பெரியோர் பேசியிருக்கின்றனர். பெண்ணாய்ப் பிறந்து வளர்ந்

தாலும் ஓராடவருக்கு இளையாளாய் வாழ்க்கைப்படுவது மிகவுங் கொடிது. அதிலும், சக்களத்தி பிள்ளைகளிருக்கும் வீட்டில் இளையதாரமாய் வாழ்க்கைப்படுவது மிகவுங் கொடிது. உம்; அதைப் பேசியாவதென்ன, இந்தச் சக்களத்தி மகள் ஞான சௌந்தரியை என் மனதிற்கு விரோதமின்றி பெற்றபிள்ளையை விடப் பதின்மடங்கதிகமாக பாவித்தும் அவள் என்மீது பக்ஷமற்று என்கணவரிடம் எப்போதும் கோள்மூட்டுகிருள். இந்த அரசாங்கமாளிகையில் எல்லோரும எனக்குப் பயந்து நடக்கிருர்கள். அந்தப் பாவிமகள் என்னை அலட்சியம் செய்கிருள். அப்பா! அப்பாவென்று என்னேரமும் அரசர் மடிமீதேறிக் கொஞ்சுகிருள். என் குடிக்கு யேமனுக வந்திருக்கிருள்.

லேனள் பாட்டு

இராகம்-தன்னியாசி, தாளம்-ஆதி.

பல்லவி

சக்களத்தி பெற்றஞான சவுந்தரியாளெனக்குச்
சனியனைப்போலிருக்கின்ருள் (சக்)

அநுபல்லவி

பக்குவமாயரசரைப் பக்ஷமுடனேமயக்கி
பாசாங்குசெய்தே இந்த
ராஜாங்கத்துக் குகந்த (சக்)

பாவியவளேமடிய பண்ணுவேனேர்தந்திரமும்
ஆவிபிரியைப்பிரித்துவைத்தால் அரசும்நமக்கடங்கும் (சக்)

லே. வ-ம்:—இவளை எப்படியும் தொலைக்க வழிதேடவேண்டும். அப்படிச் செய்தால் அரசாங்க அதிகாரம் நமக்குக் கிடைக்கும். அரசரும் நம்மீது பக்ஷமாயிருப்பார். இப்போது வேட்டைக்கு சென்றவர் வீட்டுக்குவர இரண்டொருநாளாகும். அதற்குள் அந்தச் சிறுக்கி மம்மதையை அடக்கிவிடவேண்டும். ஆகட்டும் இவளுக்குத் தகுந்தவேலை செய்கிறேன்.

[லேனள் போகிருள்]

(சீன் முடிவு)

சீன்—4. இடம்:—சயனக்ருஹம்.

நடிகர்:—லேனள், ஞானசௌந்தரி, காவலன்.

[ஞான சவுந்தரி நித்திரையி லிருக்கின்ருள் லேனள் சவுக்கினலடித் தெழுப்புகிருள்]

லேஞ. வ-ம்:—ஏண்டி அடி தடிச்சிறுக்கி பெற்ற தறிதலேயே! என்னடியிது இராப்பகல் தெரியாமல் ஏறியமஞ்சம் இறங்காமல் தூங்கிக்கொண் டிருக்கின்ருய்.

லேஞள் பாட்டு

(கபட குருவே என்ற மெட்டு)

பல்லவி

தூக்க மென்னடி சொல்லுவா யிப்போதடி (தூ)

அநுபல்லவி

ஆக்கி உனக்களிக்க அடிமை பட்டவளோ
அடிப்பேன்எழுந்துநில்லடி அடமிதென்னசொல்லடி (தூ)

சரணம்

பசப்பிவுன் தந்தையிடம்
பாசாங்கு செய்து
படுத்துக்கொண் டாயேவந்து
பலுக்கா தெழுந்திரடி (தூ)

வ-ம்:—எழுந்திரடி: என்ன இறுமாப்புடன் படுத்துக்கொண் டிருக்கின்ருய். ஆயிரமுறை கூப்பிட்டும் காது கேட்க வில்லேயோ.

[அடிக்கின்ருள் ஞானம் அலறி எழுந்திருந்து]

ஞானம் பாட்டு

(ஆயமுஜதாதேஜி என்ற மெட்டு)

தொகையரு

அன்னேயே என்னநான் செய்தேனென்
றிப்படிப் பேசி
சொன்னசொல் மாறியே
தூஷிப்ப தேனம்மா யேசி

பாட்டு

தூக்கம்வர லானதம்மா ஏக்கமுனக் கேஞேசும்மா
ஏதொன்றும் நானறியேன் எந்தன்மே லிந்தக்கோபமா
வாதொன்று பேசவந்தீர் மங்கைநான் செய்தபாபமா
வருத்தமாகா தம்மா மயக்கமேனே சும்மா

எந்தனம்மா

இந்தவிதமா என்னே யேசுவ தேனம்மா
ஈதாகுமா மனச் சூதாகுமா
தந்தையே சொன்ன வார்த்தை மாறலாமா (இந்)

வ-ம்:—அம்மா! என்றுமில்லாதின்று யேனிப்படி என்னை அடிக்க வந்தீர்கள். அவ்விதம் நான் என்ன குற்றம் செய்தேன் தந்தையைப் பிரிந்த சோகத்தால் சிறிது நித்திரை செய்ய நேர்ந்தது. அதற்காகத் தாங்கள் பலவிதம் பேசித் தூஷிப்பதுடன் அடிக்கவும் வந்துவிட்டீர்கள் இது தங்களுக்குத் தகுமா.

லேனா. வ-ம்:—அடி அற்பச்சிறுக்கி என்னடி முழநீளம் வார்த்தையை நீட்டுகிறாய் யாருன்னை இப்போது தூஷித்தது. ஏண்டி லவுண்டி:

லேனாள் பாட்டு

(செல்லுவீர் என்ற மெட்டு)

பல்லவி

சொல்லடி தூஷித்ததாருனையே (சொ)
சல்லியமே பேசுகிறாய்
சண்டி லவுண்டி சிகண்டியே (சொ)

அநுபல்லவி

சொல்லாத வார்த்தைகள் சொல்லுகின்றாயடி
சூரிலைவத் தறுப்பேனடி நாறிபெற்ற நீலிமகளே (சொ)

சரணம்

தின்றுகொழுத்த திருட்டுச்சிறுக்கியே
தேவடியாளைப்போல் தேகமினுக்கியே
ஒன்றுமறியாதவள்போல் நடிக்கிறாய்
உதைபடுவாய் பழிகாரியே
குணமறியா சதிகாரியெ (சொ)

வ-ம்:—ஆ! அப்படியா சமாச்சாரம்; வாய்பேச்சு வாயிலிருக்குமுன் நீலியைப்போலழுது பழிபோடுகின்றாயே. இப்படித்தானே அழுதழுது அப்பா அப்பாவென்று அவரிடம் புறளிபேசி கோள்மூட்டி விடுகிறாய். அதிருக்கட்டும்; ஏண்டி இப்படி தின்றுவிட்டு இராப்பகலின்றி நித்திரை செய்தால் வீட்டுவேலையைக் கவனிப்பதெப்படி? (விளக்குமாற்றைக் காட்டி) இந்த விளக்குமாற்றை எடுத்து வீட்டைவிளக்கி சுத்தம் செய்யடி.

ஞான. வ-ம்:—அம்மா! இதுவரையும் நான் செய்தறியாதவேலையைச் செய்யும்படிச் சொல்லலாமா, வேலைக்காரிகளிருக்கின்றார்களே?

லே. வ-ம்:—ஆமாண்டி! பசப்பாதே இப்படிவா; வேலைக்காரிகள் செய்வதெனக்குத் தெரியும். கழுதையைப்போல் வளர்ந்துவிட்டாயே நாளை புருஷன்வீட்டுக்குப்போனால் இந்தவேலைகள்

எல்லாம் செய்யவேண்டுமே இல்லாவிட்டால் யாரடி உன்னை வளர்த்தவளென்று என்னைத்தானே வைவார்கள்.

ஞான. வ-ம்:—அப்படி வேலை செய்யக்கூடிய இடத்திற்கு அப்பா என்னை விவாகம் செய்து கொடுக்கமாட்டார் கொடுத்தாலும் தாதிகளை அனுப்பிவைப்பார்.

லேனு. வ-ம்:—சரிதான் ; ஆண்பிள்ளையைப்போல் துரைத்தனம் செய்யலாமென்றிருக்கின்றாயோ ? சீச்சீ வாயாடி மகளே! விளக்குமாற்றைக் கையில் எடுத்து வேலையைச் செய்யடி.

[அடிக்கின்றாள் ஞானம் விளக்குமாறெடுத்துப் பெருக்கிக்கொண்டு]

ஞானசௌந்தரி பாட்டு

(வருகலாமோ என்ற மெட்டு)

பல்லவி

அடிக்கலாமோ அம்மாவே என்னை
ஆத்திரமேகொண்டு க்ஷாத்திரமாய்நின்று (அடி)

அநுபல்லவி

பிடித்துவிளக்குமாற்றை யறியேனே என்றும்
பெருக்கிமுத்தமிதனைத் தெரியேனே இந்தப்
பிடிவாதமுடன் அடிமேலடியாய் (அடி)

சரணம்

தந்தைஇருந்தால் மனஞ்சகிப்பாரோ பெற்ற
தாயிலாப்பிள்ளை என்னையுதைப்பாரோ இது
தருணம்சரணம் புரிவேனுனையே (அடி)

ஞான. வ-ம்:—என்னருமைப் பிதாவே! இவ்விதம் நிகழுமென்றெண்ணித்தான் உம்முடன் வருவதாகச் சொன்னேன். என் வார்த்தையைத்தடுத்துத் தாங்களிங் கென்னைவிட்டுச் சென்றதின் பலனை இப்போதனுபவிக்கிறேன்.

லேனு. வ-ம்;—என்னடி அசடே! சும்மா நீட்டிப் பேசுகிறாய். சொன்ன வேலையைச் செய்யும்.

[ஞானம் பெருக்க லேனாள் தான் வாங்கிப் பெருக்கிக் காட்டுதல்]

ஞான. வ-ம்:—அம்மா! முன்பின் இவ்வேலை செய்தறியேன். தாயே மன்னிக்கவேண்டும்.

லேனு. வ-ம்:—வேலை செய்யத்தெரியாது? கடாவைப்போல் நின்று விட்டு விளையாடத் தெரியுமா?

ஞான. வ-ம்:—அம்மா! இனிமேல் விளையாடுவதில்லை; தாங்க ளுத்திரவின்படி நடக்கிறேன்.

லேனுள் பாட்டு

(மாதவரே என்ற மெட்டு)

பல்லவி

போதுமடி சும்மா புலம்பாதே (போ)

அநுபல்லவி

ஏதுக்குநீவீட்டில் இருக்கின்றுயோ சொல்லு
எத்துக்கள்ளியேயுந்தன் வித்தையறிவேனடி (போ)

சரணம்

வீட்டுக்குநீயொரு பிள்ளையோ இந்த
வேலைசெய்தாலென்ன தொல்லையோ
நீட்டுகின்றுயடி மேட்டிச்சிறுக்கிபோல்
காட்டுமிராண்டியே வாட்டிவதைப்பேனடி (ஏது)

அல்லும்பகலும் விளையாடியே வெகு
ஆணவமாக வாயாடியே
கொல்லைக்காட்டுநரி போலேகுதிக்கின்றுய்
கொதிக்குமுலைக்கரிசி வடிக்கக்கொடுத்திடடி (போ)

லேனு. வ-ம்:—நேரமாகிவிட்டது; தாதியரும் வரவில்லை சாதஞ் சமைக்கவேண்டும். சீக்கிரமாக இந்த அரிசியைக்குத்தி உலையி விடு.

ஞான. வ-ம்;—அம்மா! இதென்ன அநியாயம்; மென்மேலும் நான் செய்யத்தகாத வேலையையே சொல்லுகின்றீர்கள். தாயே இது கடினமம்மா.

லேனு. வ-ம்:—என்னடி! எல்லா வேலையும் செய்து சமைத்து வைத் தால் சாப்பிட்டு ஏப்பமிட வருவாயோ?

ஞா. வ-ம்:—சாதமும் வேண்டாமம்மா, வேலையிடாம லிருந்தால் போதும்.

லே. வ-ம்:—ஆ! அப்படியா சமாச்சாரம்! சிறுக்கி மகளே! எதிர்த் துப்பேசவும் ஆரம்பித்துவிட்டாயா. உம். ஆகட்டும் அரிசியைக் குத்தடி.

[அடிக்கின்றுள். ஞானம் கையில் உலக்கையைப் பிடித்தவண்ணம்]

ஞானசௌந்தரி பாட்டு

(சாமி என்னை என்ற மெட்டு)

பல்லவி

தாயே என்னையடிப்பது தர்மமல்லவே (தா)

அநுபல்லவி (கண்ணிகள்)

சேய்நானிந்தவேலையை செய்தறியேனே அம்மா
சிவந்துகரம்நோகுதே தேகம்வலிக்குதம்மா (தா)

தாயில்லாபிள்ளைநானே தயங்கியழலானேனே
தாள்பணிகுவேனென்மேல் தயைசெய்குவாயம்மா (தாயே)

ஞா. வ-ம்:—அம்மா! பெற்றதாயில்லா பிள்ளை என்னை இவ்வாறு திட்டியடிப்பது தகுமா தாயே! என் பிதாவானவர் தங்களிடம் என்னைப்பற்றி எவ்வளவு இரக்கத்துடன் சொல்லிப்போனுர். அரிசியைக் குத்தவும் வீட்டைச் சுத்தஞ்செய்யவும் ஆகிய இவ் வேலைகள் நான் பிறந்து இதுவரையும் செய்தறியேனே. இனி யாயினும் தயவு செய்து என்னைத் துன்பம் செய்யாதிருக்கக் கோருகிறேன்.

லே. வ-ம்:—எண்டி! மானங்கெட்ட மடச்சிறுக்கி மகளே! உன் தாய் இருந்தால் வீட்டுவேலைகளைச் செய்யச்சொல்ல மாட்டாளா. விஸ்தாரம் பேசாமல் வேலையைப்பாரடி.

[ஞானங் குத்துகின்ருள் லேனுள் தானும் செய்துகாட்டல்]

லே. வ-ம்:—தடிமாடுபோல் வளர்ந்துவிட்டாய். வாயாடப் படித்துக் கொண்டாய்! வேலை செய்யத் தெரியாதென்கின்ருய்! ஆண்பிள் ளையைப்போல் சிம்மாசனத்தமர்ந்து அரசாளப்போகின்ருயோ.

ஞா. வ-ம்:—அரசுக்குப் பிள்ளையில்லாவிட்டால் பட்டம் எனக்குத் தானே. கடவுள் கிருபையாலும் தேவபிதாவின் சகாயத்தாலும் தங்களுக்குப் புத்திரன் பிறந்தால் பட்டம் அவனுக்குத்தான். அவனது கட்டளைக்கடங்கி நான் நடக்கவேண்டியவள்தான்.

லேனுள் தர்க்கம்

(சரி சரி என்ற மெட்டு)

அடக்கடி ஆங்காரக்காரி சும்மா (அட)

அகம்பாகமு மிகவேகொண்ட
பழிகாரியே அறிவேனுனை (அட)

ஞானசௌந்தரி பாட்டு

(தில்லாம்திரி என்ற மெட்டு)

எல்லாந்தெய்வ சூதோநானும்
என்செய்தே னென்தாயே
சொல்லாலென்னை யேசிப்பேசி
தூஷிப்பதும் நீயே

லே. வ-ம்:—ஏண்டி விஸ்தாரக்கள்ளிபோல் விண்ணனம் பேசுகிறுய். வேலையை செய்யடியென்றுல் தெரியாதென் றழுகிறுய். என்னடி உன் பசப்பு.

ஞா. வ-ம்:—அம்மா செய்து பழக்கமில்லாததினுல் சிரமமாகத் தோன்றுகிறது. மன்னிக்க வேண்டும்.

லே. வ-ம்:—அடி! இந்நேரம் பாவி உன்னுடன் பேசி என் நாவுலர்ந்து விட்டது. ஐஸ் சோடாவாட்டா கொண்டுவாடி.

[ஞானம் உட்சென்று சோடாகொண்டு வரக் குடித்துவிட்டு]

அடி ஞானம்! உஸ்! அப்பா! இப்படிவாடி உனக்கு வேலைகளைக்காட்டி கொடுக்கப்போய் என் தேகமெல்லாம் நோகுதடி. ஆனதால், சோபாவில் சிறிது சயனிக்கிறேன்.

லேனுள் பாட்டு

(சரி சரி என்ற மெட்டு)

பிடியடி பேசாமலேஎன்காலை (பிடி)

பிழையேசொன்ன பழிகாரியே
அழுகாமலே இதுவேளையில் (பிடி)

ஞானசௌந்தரி பாட்டு

(தில்லாம்திரி என்ற மெட்டு)

பெற்றுள்தானே உனதுபிள்ளை
பிழைநான் செய்யவில்லை
சற்றேயென்மேல் தயைசெய்குவாய்
சரணஞ் செய்வேனம்மா (பெற்)

லேனு. வ-ம்:—அடி பாசாங்கு கள்ளி! பேசாமல் காலைப் பிடியடி. தேம்பித் தேம்பி அழுகின்றுய்.

[ஞானம் கால் பிடிக்க லேனுள் சிறிது பொருத்தெழுந்து]

அடி ஞானம்! நான் அந்தப்புரம் சென்றுவருகிறேன். வீட்டை விட்டு வெளியில் போகாமல் இங்குதானே இருக்கவேண்டும்.

[போகின்றுள்]

ஞான. வ-ம்:—ஹே ஜேசுவே! ஜெகத்ரக்ஷக ஜீவகாருண்ய பிதாவே! இதுவும் நின் சோதனையா? காரணமின்றி இன்றென்னை இளந் தாய் இவ்விதக் கொடுஞ்செயலைச் செய்தனளே? பிதா வருவதற்குள் இன்னும் எப்பாடு படுத்துவாளோ? ஜேசுநாதா! சிறியாளென்னைக் காப்பாற்றவேண்டும்.

ஞானசௌந்தரி பாட்டு

(பிகடிபனுதோ என்ற மெட்டு)

கண்ணிகள்

தேவாஸ்ரீஜேசுநாதா சிறியாளென்மீதுவாதா
காவாவினோதபாதா காருண்யனேப்ரபோதா (தே)

தாயேமரியேயெனம்மா தனையாளைக்காருமம்மா
நீயேயாதாரமம்மா நினைவேனுன்பாதமம்மா (தே)

[பாடியவண்ணம் சோபாவின்மீது படுத்து சோகத்தால் நித்திரை செய்கிருள். லேனுள் வந்து பார்த்து]

லேனு. வ-ம்:—என்னடீக்காகப் படுத்துவிட்டாள். சண்டாளி. உன் மமதை இன்றுடன் ஒழிந்ததா? சக்களத்தி மகளே! பட்டம் தரித்து உலகாளவா நினைத்திருக்கின்றுய்? ஆகட்டும் பார்க்கிறேன் உன் சமர்த்தை. [யோசனை]

ஆமாம்: வேட்டைக்குப் போனவர் வந்தவுடன் நடந்த விஷயங்களை எல்லாம் சொல்லிவிடுவாள். பிறகு அரசர் என்னைத்தான் தண்டிப்பார். தவிறவும் இவள் இந்த வீட்டில் இருக்குமளவும் என் தலைக்குத் தீம்புதான். இதற்கெப்படி யோசனை. [யோசித்து]

உம்; அதுதான் சரி. அடியோடு அழித்துவிட்டால் அன்புடன் அரசர் என்னிஷ்டப்படி நடந்துவருவார். என்றேனும் ஒரு பொழுது இவளால் என்னுயிருக்கு ஆபத்து வருவது நிச்சயம். இன்றே இவளைத் தீர்த்துவிட்டால் சனியன் தொலைந்ததென்று சந்தோஷமா யிருக்கலாம். சீக்கிரம் இவ்வேலையை செய்து முடிப்போம். [போகிருள்]

(சீன் முடிவு)

சீன்—5. இடம்:—வீட்டு வெளிப்புறம்.

நடிகர்:—லேனுள், இரண்டு கொலைஞர்.

லேனு. வ-ம்:—எங்கே கொலையாளிகளைக் காணோம். இங்குவரும்படி தானே சொல்லியனுப்பினேன் மறைவிலிருக்கின்றார்களோ.

[கையைத் தட்டுதல் இருபுறமாக கொலைஞ ரிருவர் வருதல்]

கொலை. வ-ம்:—தாயே நமஸ்காரம்! எம்மை யழைத்த விவர மென்ன?

லேனு. வ-ம்:—அடே சத்தமிடாதீர்கள் கவனமாக நான் சொல் வதைக் கேளுங்கள். தக்க சன்மானம் தருவதுடன் அரசாதி காரிகளிடம் தெரிவித்து இம்மாதமுதல் சம்பளமும் உயர்த்தச் செய்கிறேன்.

1-வது கொலை. வ-ம்:—ராணியிஷ்டம் நம்ம அதிஷ்டம்.

2-வது கொலை. வ-ம்:—டேடே! சமாச்சாரம் கேள்டா.

லேனுள் பாட்டு

(தாயேநமஸ்காரம் என்ற மெட்டு)

இது ஒருபுது ரகசியம் நான்
இயம்புவதுமோ ரதிசயம்
ததியிதுசெய்வி ரவசியம்
சாற்றுவேன் நல்ல ஜோசியம் (இது)

வ-ம்:—கொலைஞர்காள்! இப்போது நான் சொல்லக்கூடிய விஷயம் மிகவும் ரகசியமானது ஆகவே அவ்விஷயத்தை வெகு ஜாக்ர தையாகக் கவனிக்கவேண்டும். அஜாக்ரதையா யிருப்பீர்களா கில் அவசியம் உங்களுக்கு தக்க தண்டனை நேரும்.

1-வது கொலை. வ-ம்:—சொல்லுங்களம்மா! செய்து முடிக்கிறோம்.

லேனு. வ-ம்:—எனது சக்களத்தி பிள்ளை யிருக்காளே தெரியுமா?

2-வது கொலை. வ-ம்:—ஆமாம் மவராணியம்மா ஞானம்மா இருக் காங்க.

லேனு. வ-ம்:—அந்தப் படுபாவியால் எனக்கும் அரசருக்கும் தீராத மாற்சல்யம் ஏற்பட்டு வருகிறது ஆகவே அவளை தீர்த்து விடக் கருதினேன். வேந்தரும் வேட்டைக்குப் போயிருக்கார் இது சமயம்.

பாட்டு

(ஷை மெட்டு)

பாவி யவளைத் தூக்குவீர்
ஆவிதன்னைப் போக்குவீர்
தேவி துயரை மாற்றுவீர்
தினமும் பொருளைப் பெற்றுவீர் (இது)

வ-ம்:—ஞான சவுந்தரியை இன்றிரவு எடுத்துக்கொண்டுபோய் காட்டில் வெட்டி எரித்துவிட வேண்டும் ஆளுக்கொரு பை பவுன் தருகிறேன்.

1-வது கொலை. வ-ம்:—ஏம்மா சமாச்சாரம் வெளியானுக்கா நாங்க என்ன செய்றது.

லேன. வ-ம்:—அதைப்பற்றி உங்களுக்குக் கவலை வேண்டாம். அரசரை நான் சரிப்படுத்திக் கொள்கிறேன்.

1-வது கொலை. வ-ம்:—ராஜா வூட்ளே காவலாளிங்க இருப்பாங்க அவங்களை யறியாம நாங்க எப்படிவந்து எடுத்துப் போறது தாயே.

லேன. வ-ம்:—இன்றிரவு காவலாளிகள் இங்கு வராமலிருக்க யேற்பாடுசெய்கிறேன். ஞானசவுந்தரி அயர்ந்து தூங்கும்படிக்குக் குளோபாரம் கொடுத்து விடுகிறேன் எனது மாடிக்குப் பின்புற வாயலைத் திறந்து வைக்கிறேன். இரவு நடுஜாமத்தில் மேல் மாடியிலிருந்து.

பாட்டு

(ஷை மெட்டு)

கனமுடன் கையை நொடிக்கிறேன்
கடியாரமணியை அடிக்கிறேன்
உனக்கும வார்த்தை படிக்கிறேன்
வுரைத்தபடியே முடிக்கிறேன் (இது)

வ-ம்:—கையைத் தட்டி அலாரமணி யடித்து சைகை செய்கிறேன். அது சமயம் நீங்கள் அங்குவந்து அவள் படுக்கையுடன் தூக்கிக் கொண்டு போய்விடுங்கள்.

1-வது கொலை. வ-ம்:—ஆவட்டுமம்மா ! பவுன் பையைக் கொடுங்க.
லேன. வ-ம்:—வாருங்கள் தருகிறேன். (போகின்றனர்)

(சீன் முடிவு)

——

சீன்—6. இடம்:—படுக்கைவீடு.

நடிகர்:—லேனுள் ஞானம், கொலைஞரிருவர்.

[ஞானம் படுத்திருக்க லேனுள் வெளிவந்து ஞானத்துக்கு குளோபாரங் கொடுத்து மணியடித்து கைதட்ட கொலைஞரிருவர் வந்து படுக்கையுடன் ஞானத்தைத் தூக்கிப் போகின்றனர்.]

[இந்த சீன் நடிகர் மவுன காட்சி]

(சீன் முடிவு)

சீன்—7. இடம்:—கானகம்.

நடிகர்;—ஞானம், கொலைஞரிருவர்.

[கொலைஞர் ஞானத்தை படுக்கையுடன் இறக்கி வைக்கின்றனர்.]

1-வது கொலைஞன் வ-ம்:—அண்ணே! பாவிமக என்னசொகுசா தூங்குராண்ணே! உம்; வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டாகட்டும்.

2-வது கொ. வ-ம்:—அண்ணே! பாவம் குழந்தையைப் பார்த்தால் ரெம்பவும் பரிதாபமாயிருக்கிறது. பெரிய மவராணியம்மா நமக்கு என்னகுறை செய்தாங்கோ? கொளந்தைகளைப்போல் நம்மைக் காப்பாற்றினங்கோ; மவராசா இந்தம்மாமேலே ரொம்பபிரியமா இருக்குராரு வாணண்ணே கொண்ணுப் பூட்டோமிண்ணு சொல்லி பவுன் வாங்கிக்கலாம். கொளந்தை எங்கண்ணுபோயி பொழைக்கட்டும்.

1-வது கொ. வ-ம்:—அதெல்லாம் ஒதவாது நான் பேச்சு தவறமாட்டேன். லேனம்மா சமாச்சாரம் உனக்கு தெரியாது. விடண்ணே!

2-வது கொ. வ-ம்:—அண்ணே அண்ணே! பாவமிண்ணு நான்சொல்ரதை கேளுண்ண

1-வது கொ. வ-ம்:—பாவமா புண்ணியமா; பாவம் செய்ர வுத்யோகந்தானே நமக்கிண்ண.

தர்க்கம்

(இது ஒருபெரும் என்ற மெட்டு)

1-வது கொ. கொன்றால் பாவமாகுமே
கொலைசெய்வது மபாயமே

1-வது கொ. கோபம்வரும் பாபமில்லே
ஆபத்துக் காளாகுவாய்
அரசியாக்கினே தெரிகுவாய்

2-வது கொ. ஐயோயிது ஞாயமா
ஆர்செய்வா ரனியாயமா

1-வது கொ. அடடா என்னே விடடாசும்மா
அநுதாபமே காட்டுருய்
அகமதில் பயமூட்டுருய்

வ-ம்:—விடுடா என்னே : பயங்காளிப்பயலே என்னடா பரிதாபம் லேனும்மாவுக்கு இந்தப் பொண்ணுசேஞ்ச கொடும தெரியு மாடா வுனக்கு.

2-வது கொ. வ-ம்:— அண்ணே அண்ணே வேண்டாம் வேண்டாம்; என்பேச்சை கேளண்ணே !

1-வது கொ. வ-ம்: —பேச்சாவது மூச்சாவது ; கீச்சு கீச்சுண்ணு சத்தம் போடாதே விடண்ணே விடண்ணே.

[இருவருஞ் சத்தமிட ஞானம் மூர்ச்சை தெளிந்தெழுந்து மனம் பிரமித்து]

ஞா. வ-ம்:—ஆ! என்னயிது! எங்கும் இருள் சூழ்ந்திருக்கிறது இன்னவிடமென்றும் தெரியவில்லே. நமது மாளிகையைக் காணேம். எங்கு பார்க்கினும் மரங்கள் அடர்ந்திருக்கிறது. வீட்டில் சயனித்திருந்த நான் இக்காட்டிற்கு வரவேண்டிய காரணமென்ன? ஐயோ ! என்னருமைப் பிதாவே ! இதுசமயம் நீரெங்கிருக்கின்றீர். ஆ! தந்தையே.

தர்க்கம்

(கட்டிப்பிடித்தெந்தன் என்ற மெட்டு)

ஞா. ஈதென்ன மாயமோ
யார்செய்யுபாயமோ
ஏதொன்றுங்காண்கிலனே

கொலே. எல்லாமுன் சிற்றன்னே
சொல்லால் விளேந்தது
ஏனே வீணுய்
ஏங்கித் தவிப்பதுநீ

ஞா. ஐயா என்சிற்றன்னை
செய்யச் சொன்னதென்ன
அன்புடனே யுரைப்பீர்

கொலை. ஆமாமுனைக்கொல்ல
லேனுளெமக்கிட்ட
ஆக்ஞை ஆக்ஞை
ஆனதுவே தெரிவாய்

கொலை. வ-ம்:—நாங்க இவ்வூரிலே இருக்கிற கொலையாளிங்க. ராசா வூட்லே வேலைசெய்ரோம். லேனம்மா உங்களை வேலைதீர்த்துடச் சொன்னுங்கோ. தூக்கிவந்தோம் இந்த காட்டுக்கு பலிகொடுக்க ணும். என்ன சொல்ரே.

ஞா. வ-ம்:—என்னைக் கொலைசெய்யப் போகின்றீர்களா?

கொ. வ-ம்:—இல்லே இல்லே. கழுத்தைமட்டும் வெட்டிவிடுவோம்.

ஞா. வ-ம்:—ஆஹா! அப்பா.

[கொலைஞர் காலில் விழுந்து]

பாட்டு

(கண்கள் தெரியாமல் என்ற மெட்டு)

என்னரு அண்ணமாரே
ராஜனுக்கு நானொரு
ஏகபுத்ரியல்லவோ என்
ஏலரே கொலை யாளரே
கொல்லமன மில்லாமலே
குழந்தை என்னை ரக்ஷிப்பீர்
கோபம் செய்யலாகுமோ என்
கொலைஞரே ஓ கொலைஞரே

ஞா. வ-ம்:—அப்பா கொலைஞர்களே! நான் வேறு உங்கள் குழந்தை வேரு! தாயில்லாப் பிள்ளையாச்சுதே! எனது தகப்பனரிடம் நீங்கள் அடிமைப்பணிபுரிபவர்களல்லவா! அண்ணரே! சிறிய தாயார் ஏதோ தனது புத்தி சுவாதீனமின்றி இவ்விதம்செய்யக் கட்டளையிட்டாலும் நீங்கள் இக்கொடிய விஷயத்தைச் செய்து பாபத்திற்கும் தேவபிதாவின் கோபத்திற்கும் ஆளாகப்படாது இவ்வுபகாரம் புரிவீரேல் ஆயுளுள்ளவரை உங்களைக்காப்பாற்று வேன். என்னை மன்னிக்க வேண்டும்.

1-வது கொ. வ-ம்:—என்னடா இது. தர்மசங்கடமா யிருக்கு. எண் டாண்ணே என்ன சொல்ரே.

2.வது கொ. வ-ம்:—அண்ணே! நான்தான் முன்னாலே சொன்னேன். வாணும் உட்டுட்டு பூட்ளாம்ணு.

1-வது கொலே. வ-ம்:—ஓதவாது; நான் சொல்ரேன் கேள். லேனம்மா சொன்னதுபோலே செய்யவாணும் இந்தப் பொண்ணு கையை வெட்டி எடுத்துப்போலாம். பாவம் இந்தக் கொழுந்தை பொழைச்சி போவட்டும்.

2-வது கொலே. வ-ம்:—அண்ணே! கையை வெட்டிட்டா ரொம்ப பரிதாபமாயிருக்கும். இப்படியே உட்டுட்டு பூட்டம்ணு கர்த்தர் தயவு செய்வார்.

1-வது கொலே. வ-ம்:—அதெல்லாம் கூடாது. நீ வேணும்ணு மறைவாயிரு. நானு வேலையை முடிச்சிவர்ரேன்.

[2-வது கொலேஞன் மறைகிருன். 1-வது கொலேஞன் ஞானத்தின் இரு கரங்கனேயும் வெட்டி எடுத்துப்போகிருன்]

ஞானசௌந்தரி பாட்டு

(பையல்மாரன் என்ற மெட்டு)

சண்ணிகள்

தெய்வமோனா — னே துசெய்வேன்
கைகள் — நோகலானதே
வையகத்தி — லெள்ளேக்கார்க்க
வந்தருள்செய் — ஜேசுவே (தெய்)

பார்க்கப்பய — மானகாட்டில்
காக்குந் — துணேயில்லேயே
ஆர்க்குநீ — பிதாவல்லவோ
ஆண்டருள்செய் — ஜேசுவே (தெய்)

(சீன் முடிவு)

சீன்—8. இடம்:—லேனுள் வீடு.

நடிகர்;—தருமராஜன், லேனுள், சேவகன்.

லேனு. வ-ம்:—காவலா; பிராணபதி இன்று வருவதாக, தூதுவர் சேதி கொண்டுவந்தது உண்மைதானு?

காவ. வ-ம்;—அம்மா! நேற்றிரவே ராஜமாளிகைக்கு வந்துவிட்டார். இது சமயம் இங்கு வரக்கூடும்.

லேனு. வ-ம்:—ஓஹோ! அதோ அரசர் வருகிற முரசம் கேட்கிறது அடே! ஞானம் விஷயம் ஞாபகமிருக்கட்டும்.

காவ. வ-ம்:—ஆஹா! நன்ருய் ஞாபகமிருக்கிறது. ஒன்றும் மூச்சு விடமாட்டேன்.

[தர்மராஜன் வர லேனுள் எழுந்து]

லேனு. வ-ம்:—நாதா! நமஸ்காரம்; அமருங்கள்.

தர். வ-ம்:—காதலி! நீயும் இப்படி உட்கார்.

லே. வ-ம்:—பிராணேசா! வேட்டையின் ஆரவாரம் வீட்டு ஞாபக மில்லைபோலும். வனவேட்டையில் சிரமமதிகமோ?

தர். வ-ம்:—சிரமமில்லை; நாளாயது கண்ணே.

தர்மர் விருத்தம்

கானகவேட்டையாடிக் களைப்பிளைப்பாறிவந்தேன்
தானினுருடிகளுக்கே சஞ்சலமேதுமில்லை
தேனெனுமொழியினளே தேவியேநமதுசெல்வ
ஞானசௌந்தரிதானெங்கே நாயகிநவிலுவாயே.

தர். வ-ம்:—குழந்தையின் ஞாபகமிகுதியால் ஓடோடியும் வந்தேன். நான் சென்றதுமுதல் பள்ளிக்குப் போகின்ருளா? அல்லதென் நினைவால் வீட்டிலிருக்கின்ருளா? நாயகி லேனு.

தர்மர் பாட்டு

(கோலாகலலீலை என்ற மெட்டு)

பல்லவி

எங்கேமகள் ஞானசௌந்தரி
எங்கே சொல்வாயடி (எங்)

அநுபல்லவி

மங்கையேயென் மாதரசேவனிதாமணி (எங்)

சரணம்

இங்கவளைக்கண்டால் மனம்ரமிக்கும்
இல்லையென்றிடிலோ உடல்துடிக்கும்
சங்கையின்றியே சாற்றிடுவாயடிநாயகி (எங்)

தர். வ-ம்:—மகளைக் காணுது மனமகிழாது. எங்கு சென்ருள். எங் கிருக்கிருள். நான் வந்து இவ்வளவு நேரமாகியும் குழந்தை வராத காரணமென்ன?

லேனு. வ-ம்:—நாயகா! என்ன அவசரம். குழந்தையின் க்ஷேமத்தை அறியவும், அவளை நேரில் காணவும் துரிதப்படுகின்றீர்களே? தவிற தாங்கள் சென்றநாளாய் நான் அடைந்த சிரமத்தையும் தேக வியாதியையும் விசாரிக்கவில்லையே.

தர். வ-ம்:—வேனு! உன்னை விசாரிக்கவேண்டியது முக்கியமே. ஆயினும் தற்போது நாமிருவரும் சந்தித்துப் பேசுவதால் விசாரிக்க வேண்டிய காரணமில்லை. ஆகவே, மகள் விஷயத்தையே கேட்க நேர்ந்தது.

லேனு. வ-ம்:—நாதா! அதுவும் சரி. ஆனால், நமது குழந்தையின் விஷயத்தை சொல்கிறேன் கேளுங்கள்.

லேனுள் பாட்டு

(மஞ்சுநிகர் என்ற மெட்டு)

மன்னவாயென் பிராணநாதரே
மாமணமிகுந்த பூமாலைகொண்ட
மார்பரே மகாகுணாளரே இந்த
மங்கையென்விடை கொண்டுநீர்செல்ல
இங்கிருந்தனள் சங்கையின்றிநான்
மாடியின்மேல் வேலையாய்ச்சென்றேன்
வந்துபின்பார்க்க இந்தயிடத்தில்
மகளையுங்காணமலே நின்றேன் (மன்)

வேனு வ-ம்:—பிராணேசா! தாங்கள் ஞானத்தை என்னிடம் விட்டுச் சென்றதும் சிறிதுநேரம் அப்பா அப்பாவென்று அழுது கொண்டிருந்தாள். என்னால் இயன்றவரை இதரவார்த்தைகளால் அவளது மனமகிழச்செய்து வேண்டிய பலகார பழங்களைக் கொடுத்து விளையாடச் சொன்னேன். சந்தோஷமாகவே விளையாடிக்கொண்டிருந்தாள். நான் மேல்மாடியில் சிறிது வேலையாகச் சென்றிருந்தேன். பின்பு வந்துபார்க்கக் குழந்தையைக் காணவில்லை. ராஜமாளிகை எங்கும் தேடினேன். வேறு நான் என்செய்வது. வேவுகாரரைவிட்டு பலவிடமும் தேடச் சொன்னேன். கிடைக்கவில்லை. நாதா! தாங்கள் என்ன நினைத்தாலும் சரி; தெய்வசாக்ஷியாக குழந்தை ஞானத்துக்கு நான்,

பாட்டு

(ஷை மெட்டு)

குற்றமொன்றுஞ் செய்தறியேனே
ஞானமவட்கே ஆனதுதந்து
கோபமின்றி உபசரித்தேனே நெஞ்சில்
கொஞ்சமும்பய மின்றியேயுமை

பின்தொடர்ந்தனள் என்னசெய்குவன்
கொஞ்சப்போதில் வந்துசேருவாள்
சஞ்சலம்வேண்டாம் வஞ்சகமில்லை
கொண்டதோர் விசனமாற்றுவீர் (குற்)

வ-ம்:—என் வயிற்றுப்பிள்ளையா யிருந்தால் இவ்விதம் போவாளா? நான் என்ன செய்தும் என்னபிரயோசனம். உம்; எங்குபோயிருப்பாள் தாங்களைப் பின்தொடர்ந்து காட்டிற்குப் போயிருக்கலாம். சுத்தி யலைந்து கொஞ்சநேரத்தில் வந்து சேருவாள்.

தர் வ-ம்:—லேனு இதென்ன வார்த்தை? இதுவோ நினது பெண் பிறப்பின் தன்மை மாற்ருந்தாய் என்ற வார்த்தையை நிலை நிறுத்தி விட்டாயே.

தர்மர் பாட்டு

(தீரவீரனே என்ற மெட்டு)

இந்தமாபணி யேபுரிந்திடில்
எங்குசென்றிடு வாளடி
இந்தவேளைநீ சொல்லும்வார்த்தையில்
எள்ளளவுமுண்மை யில்லையே
விந்தையாமிது எந்தன்முன்னில்
விளம்புராய்மகள் சென்றதோர்
அந்தரங்க மானதை
அறிவேன்தெரியு முந்தன்ஜாலமே (இந்)

லேனு. வ-ம்:—எனிக்கனே கோபம் நானென்ன செய்தேன் தங்கள் குழந்தையை அடித்தேனு வதைத்தேனு அவளுக்கு நான்செய்த உபசாரம் ஆண்டவருக்குத் தான் தெரியும்.

வ-ம்:—லேனு தேவபிரீதியாக உண்மைக்கு விரோதமின்றி உள்ளன்போடு உபசரித்திருப்பாயாகில் என் குழந்தை இவ்விடம் விட்டுப் போவதற்கு ஞாயமில்லை உன் வார்த்தையை யோசிக்க நீ நயவஞ்சகம்செய்திருப்பாயென்று நானே நினைக்கிறேன் தாயில்லாப் பிள்ளையை இவ்வித அலங்கோலம் செய்யலாமா சகலரும் என்னையன்றோ தூஷிப்பார்கள் நடந்த விஷயத்தை உண்மையாக உரைக்கவேண்டும்.

லேனு பாட்டு

(கல்லோசொல் என்ற மெட்டு)

கண்ணிகள்

ஐயோ இதென்னபாவம் ஆகுமோ இவ்வார்த்தைமன்னு
பொய்யோநான் சொல்லுவது போதபோது மிவ்வாது (ஐ)

பெற்ருல்தானே என்பிள்ளை பேசவந்தீ ரென்னகொள்ளை
சற்ருகிலும் பிசகு தானே செய்யேனேமன்ன (ஐ)

வ-ம்:—நாதா தாங்களிவ்விதம் பேசுவது தகாது. என் பிள்ளைவேறு என் சக்களத்திபிள்ளை வேருக நான் நினைக்கவில்லை பெற்ருல் தானு என்பிள்ளை தங்கள் குழந்தை என் குழந்தை யல்லவா? தங்களுக்கு வாழ்க்கைப்பட்ட இது நாளாக குழந்தையை நான் போஷிப்பதும் பாஷிப்பதும் தூஷிப்பதும் தங்களுக்குத் தெரியாதா. நானில்லாத சமயம் தங்களைத் தேடி வந்துவிட்டாள். வீட்டைவிட்டு வெளியேற முடியாத பெண் பேதையாகிய நான் என்ன செய்வேன் எல்லாமறிந்த தாங்கள் இப்படிப் பேசுவது தகாது.

தர். வ-ம்:—அடிபாவி என்ன சாகசம் பேசுகின்ருய் அப்படியே குழந்தை என்னைத்தேடி வந்தாலும் வேலையாட்களிடம் சொல்லி யனுப்பி யிருக்ககூடாதா. செய்யக்கூடாத வஞ்சகச் சூழ்ச்சி செய்து விட்டு என்னிடம் கொஞ்சிக் கொஞ்சிப் பேசுகிருய் சண்டாளி துற்கபடி.

பாட்டு

(வோஷரி பாஷிதம் என்ற மெட்டு)

கண்ணிகள்

ஞான சவுந்தரி தன்னையே
நம்பி விட்டேனடி வுன்னையே
போனவிடம் தெரியாமலே
பொய் புகன்ருய் மதியாமலே (ஞா)

தாயில்லாப் பிள்ளையைத் தானுமே
தனி விடுத்தா யின்னேரமே
சேயவளை எங்கு நானுமே
தேடிக் காண்பேனடி பூதமே (ஞா)

வ-ம்:—உன் வார்த்தையாலேயே என் குழந்தைக்கு நீ அபசாரம் செய்திருக்கிரு யென்று நன்ருய்த் தெரிகிறது இன்றே உன்னை கடின தண்டனைக்குட்படுத்தி யிருப்பேன். ஆனல் எது விஷயத்தையும் நன்ருய் ஆலோசித்து செய்யவேண்டு மாதலால் இப்போதே சென்று ஞான சவுந்தரியைத் தேடிப்பார்த்து உண்மை இன்னதென் றறிந்து உனக்கு வேண்டிய சிக்ஷை விதிக்கிறேன் சற்றுப்பொறு வருகிறேன். (போகிருன்)

லேனு. வ-ம்:—போய்ப்பார்த்து வரட்டும் அவள் கிடைத்தா லல்லவோ இவர் என்னை தண்டிக்கப்போகிருர் வரட்டும் பார்ப்போம். (போகிருள்)

(சீன் முடிவு)

சீன்—9. இடம்:—கானகம்.

நடிகர்:—பிலேந்திரன், வேடர்கள், ஞான சவுந்தரி

பிலேந்திரன் பாட்டு

(போகசுகம் நீ என்ற மெட்டு)

பல்லவி

வாரீர் வேடரே விரைவாய் இந்த
வனத்தில் மதத்த மிருகத்தை வதைக்க (வா)

அநுபல்லவி

வாரீர் சிலை வளைத்து
நேரில் கணை தொடுத்து
சேரீர் புதர் கலைத்து
தீரா வுதார அபார கெம்பீரரே (வா)

சரணம்

ஓடிவருகு தெதிரே ஒரு சிங்கம்
ஓலமிட்டு விழுவே அத னங்கம்
கூடிநின்று சுடுவீர் வன மெங்கும்
சூழுங்க வளைந்து மிருகங்கள் கலங்க (வாரீ)

வ-ம்:—வேடர்காள்! கூட்டங்கூட்டமாக வரும்மிருகங்களை மடக்கி, ஈட்டி பாலாவினால் குத்தி புதர்களைக்கலைத்து துஷ்டமிருகங்களை வெளிப்படுத்துங்கள் அமோகமான அஸ்திரங்களை விட்டு அநேக மிருகங்களை நானும் கொன்று குவிக்கிறேன். (உட்செல்கின்றனர்)

ஞானசௌந்தரி பாட்டு

(ஐயையோ நான் என்ற மெட்டு)

கண்ணிகள்

கர்த்தனேனான் என்செய்வேன் காத்திட வாராய்கன்னியை
உற்றதுணை வேறில்லையே உன்னருள் தாராய்ஜேசுவே
தாயில்லாத பிள்ளைநானே தயங்கிடலானேன் தேவனே
நீயேமறிய தாயெனம்மா நேரினில்வா ராய்முன்னமே

வ-ம்:—ஐயோ தேவபிதாவே ஜேசுவே என்செய்வேன் என்னால் சகிக்ககூடவில்லையே கர்த்தனே காப்பாற்ற வேண்டும்.

பிலே. வ-ம்:—(வெளி வந்து) வேடர்காள் என்ன ஆச்சரியம்! மனித சஞ்சாரமில்லாத இக்கொடிய வனத்தில் யாரோ ஒருவர் ஓலமிடுங் குரல் கேட்கிறது அதுவும் பெண்குரலா யிருக்கிறது கவனித்துக் கேளுங்கள்.

பாட்டு ஷை மெட்டு

ஞானம். தாயில்லாதபிள்ளை நானே
தயங்கிடலானேன் தேவனே
நீயேமரியதா யெனம்மா
நேரினில்வாருய் முன்னமே

பிலே. வ-ம்:—வேடர்காள்! பலமுறையும் நாமிக்காட்டில் வந்து வேட்டையாடி யிருக்கிறோம் இவ்வித ஆச்சர்ய சம்பவத்தைப் பார்த்தது கிடையாது இன்றிப்படி நேர்ந்ததுடன் இவ்வித அப யக்குரல் கேட்கும் காரணமென்ன?

பிலேந்திரன் பாட்டு

(இங்கிலீஷ் நோட்)

ஆஹா வேடரே அழுகுரல்கேட்குது
ஆச்சரியமெங்கு பார் பார் பார்
ஓஹோ இவ்வன மீதிலோர்மகள்
ஓலமிடும்குரல் கேள் கேள் கேள் (ஆ)
கானகம்வளர் தேவதைதானோ
காந்தர்வலோக சுகாதிபரோ
மானிடரோ இந்தமாவனந்தனில்
வாய்விட்டழுவதைக் கேள் கேள் கேள் (ஆ)

வ-ம்:—வேடர்காள் நாற்புறமும்சுற்றி குரலோசை கேட்கும் காரணத்தைத் தெரிந்து வாருங்கள்.

[வேடனொருவன் ஞானசவுந்தரியைக் கண்டு பிலேந்திரனிடம் கூறுகிறான்]

வேடன் வ-ம்:—இளவரசே! அதோ நேரில் தோன்றும் குன்றுக் கருகாமையில் ஒரு பேரிளம் பெண் ரெத்தப்பிரவாகத்தில் புரண்டுருண்டு அழுது துடிக்கின்ருள் சீக்கிரம் வாருங்கள்.

[எல்லோரும் ஞானசவுந்தரியிடம் போதல்]

ஞான. வ-ம்:—அப்பா அம்மா கைகள் நோகின்றதே என்னைக் காப்பாற்றுவாரில்லையே என்செய்வேன்.

பிலேந்திரன் விருத்தம்

செந்தாமரையிற் குங்குமத்தைச்
சேர்த்துப்பார்த்த செம்மையைப்போல்
இந்தாவெதிரே இரத்தவெள்ளம்
இருமாநதிபோற் புரண்டோட

கந்தாதணியுங் குழலணங்கின்
கரங்களிரண்டும் வெட்டுண்டு
தந்தாய்தந்தை தனைநினைத்து
தயங்கியழுகுந் தகமைஎன்னே.

பிலே. வ-ப்:—என்ன இது இப்பெண்மணியைப் பார்த்தால் அரச குமாரியைப்போலத் தெரிகிறது சிறந்த வம்ஸத்திலுதித்த தோற்றம் இவள்முகத்தில் பொருந்தி விளங்குகின்றது. அப்பா அம்மா என்று பெற்றோரைநினைத்து பிரலாபிக்கின்றாள் இவளது கரங்களைத் துண்டித்திருக்கிறது நிரபராதியாகிய இவளுக்கு கொடிய சிக்ஷை விதித்தோர் யார். என்ன அக்ரமம் இவ்வித துஷ்கிர்த்தியம் செய்யும் சண்டாளரும் உலகத்தி லுண்டா! (அருகில் சென்று) ஏ பெண்வாய்! அஞ்சேல் ஆரண்யவேட்டைக்கு வந்த நான் உனது அபயக்குரலைக்கேட்டு ஆதரிக்கவே இங்கு வந்தேன் என்னிடம் உண்மையைப் புகல வேண்டும் பெண்ணே.

பாட்டு தர்க்கம்

இராகம்-பிலஹரி, தாளம்-ரூபகம்.

பி. கானகத்திற் கையிழந்த கன்னிகையே
உந்தகர்யாது

(ஷை மெட்டு)

ஞா. காவலனே நானொரு பெண் கானகத்தில்
வந்தனனிப்போது

ஞா. வ-ம்:—ஐயா! நான் திக்கற்ற ஓர் அனாதைப்பெண் காலவிதி வசத்தால் இக் கானகத்தில் கையிழந்து வாடும் கஷ்டத்திற் குள்ளாகினேன்.

பிலே. வ-ம்:—அனாதையாகிய உனக்கு ஆபத்துநேர்ந்த காரண மென்ன? உன்னை இந்த அலங்கோலம் செய்தவர்கள் யார்?

ஞான. வ-ம்:—கடவுளின் கட்டளையால் எனக்கு நேர்ந்த இக்கஷ்டத் திற்கு பிறர்மீது குற்றம் சொல்லவும் என் மனம் துணியாது ஆகவே தாங்கள் அதுவிஷயத்தை கேட்கக்கூடாது.

பிலே. வ-ம்:—நல்லது; உனது உத்தமகுணத்திற்கு மெச்சினேன் ஆயினும்,

பாட்டு ஷை மெட்டு

பி. பெற்றெடுத்த அன்னை தந்தை
பேரதையே எந்தனிடம் கூறு

ஞானம் பாட்டு

(ஷை மெட்டு)

பேசுவதற்கே தெரியேன்
பெண்ணெனக்கெ யாருமில்லை பாரு

ஞா. வ-ம்:—என்னை அன்புடன் பெற்றுவளர்த்த தாய் தந்தையரின் பெயரைச் சொல்லவும் பிரியமில்லை. தற்சமயம் அவர்களது பாதுகாப்பும் எனக்கில்லை. தாங்கள் என்னைக் காப்பாற்றுவ துண்மையாகில் இவ்விஷயத்தைக் கேட்கவேண்டாம்.

பிலே. வ-ம்:—நல்லது தாய் அல்லது தந்தை இவர்களில் ஒருவரால் நீ இச்சம்பவத்திற்காளா யிருக்கவேண்டுமென்று உன்வார்த் தையினாலேயே யூகித்துக்கொண்டேன். இனி அதையும் நான் கேட்கவில்லை ஆனாலும்.

பாட்டு ஷை மெட்டு

குற்றமென்செய் தாயுன்கையை
வெட்டினதா ருண்மைதனை சொல்லு

ஞானம் பாட்டு

(ஷை மெட்டு)

கோபமுடனேகொலைஞர் பாபமிதைசெய்தனரென்விதியே

பிலே. வ-ம்:—உன் வம்ஸத்தில் அல்லது உன் ராஜ்பத்தில் யாருக்கு என்ன தீங்கு செய்தாய்? யாருன்னை இக்கொடிய கஷ்டத்திற் காளாக்கினார்கள்? அதையேனும் தெரிவிக்கக்கூடுமா?

ஞானம் வ-ம்:—நான் கர்த்தர் ஆணைக்கு பயந்து நடப்பவள் என் பந்துக்களிலாவது நேஸரிடத்திலாவது ஒருவித குற்றத்திற்கும் ஆளானவளல்ல. ஆயினும், இக்கொடிய செய்கை எனது ராஜ யக் கொலையாளிகளால் செய்யப்பட்டதென்பதை தெரிவிக்கின் றேன். தேவபிதாவின் கிருபையால் தாங்கள் என்னைக் காப் பாற்றுவேனென்று வாக்களித்தீர்கள். தங்கள் வாக்கை நிறை வேற்றுவதுண்மையாகில் எனது பூர்வோத்திரங்களை விசாரிக் கக்கூடாது. இதுவே எனது கோரிக்கை மன்னிக்க வேண்டும்.

பிலே. வ-ம்:—சந்தோஷம்! இன்றுமுதல் என் உயிருள்ளவரை உன் னைக் கைவிடாமல் காப்பாற்றுகிறேன். கர்த்தர் கருணையால் உனது சவிஸ்தாரத்தை நாளடைவில் தெரிந்துகொள்ளுகிறேன். என்னுடன் ராஜ்யத்திற்குவா. ரணகாயத்திற்கேற்ற சிகிச்சை செய்கிறேன். என்வார்த்தையில் அவநம்பிக்கைவேண்டாம் தவிரவும் முன்பின் பழக்கமில்லாத என்னுடன் வருவதற்கும்,

தர்க்கம்

(மதிமுகமாதே என்ற மெட்டு)

பிலேந்.	பயமடையாதே	பதரியழாதே
	பாதுகார்த்திடுவேன் நான்	வா வா வா
ஞானம்.	பலமொழிபேசி	எனையழைத்தேகி
	பாதவித்திடவிடில் எவரெனக்குதவிசொல் நீநீ	
பிலேந்.	மா	பதியுனைமறவேனே
ஞானம்.	நான்	மனமிக மகிழ்வேனே
பிலே.	வரநக	ரினியே
ஞானம்.	தடையில்லை	துணையே
பிலேந்.	மனமிகவே தயிரியமாய்	எனதுடனே வா

(சீன் முடிவு)

சீன்:—10. இடம்:—சிமியோன் வீடு.

நடிகர்:—சிமியோன், மதனே, பிலேந்திரன்

சிமி. வ-ம்:—குழந்தாய் பிலேந்திரா! இன்றுன்னை நான் இங்கழைத்த காரணம் தெரியவருமா?

பிலே. வ-ம்:—காரணமின்னதென்றறியேன். விஷயத்தை உரைத்தால் அதன்படி நடக்கக் காத்துக்கொண்டிருக்கிறேன்.

சிமியோன் விருத்தம்

செல்வனேயேசுநாதன் திருவருளமையப்பெற்ற
வல்லவாஎனதுமைந்தா வழுத்துமோர்வார்த்தைகேளாய்
நல்லதோர்பருவகாலம் நாடினதாலுனக்கு
சொல்லரும்விவாகஞ்செய்ய துணிவுற்ருேம்பதில்சொல்வாயே

மதனே. வ-ம்:—மைந்தா! எங்களுக்கோ வாலிபகாலமாறி வயோதிகருகிவிட்டோம். பரமபுருஷோத்தமராகிய காத்தாது கருணையால் உன்னை புத்திரனுகப்பெற்று பேரானந்தமடைந்தோம். உனது பருவகாலம்பெருகி நின்றது. அதற்கேற்ற ஒரு பெண்ணைப் பார்த்து தேவர் திருச்சந்நிதானத்தில் விவாகம் செய்து வைக்க யோசித்திருக்கிருேம். உன்னிஷ்டமெப்படி?

சிமி. வ-ம்:—வத்ஸா! உனக்கேற்ற மணமகளை மனதில் குறித்துக்கொண்டாயா? தெரிவித்தாலதன்படி செய்து முடிக்கின்றேன்.

பிலே. வ-ம்:—தாயே! தந்தையே! தங்களது திருவாக்கிற்கு மறுவாக்கில்லை. ஆனல் என் மனதில் ஓர் கோரிக்கை இருக்கிறது எவ்

விதத்தும் தாங்களை தநிறைவேற்றி வைக்கவேண்டும். அதென்னவென்றால்,

பாட்டு

(பக்ஷமிருக்கவேணும் என்ற மெட்டு)

பல்லவி

கண்டுஅழைத்துவந்தேன் ஒருமாது
தன்னை-கலியாணம் செய்துவைப்பீ ரிப்போது

அநுபல்லவி

அன்றுநான்வேட்டை யாடிய வனத்தில்
அழகில்மிகுந்த ரூபசுந்தரியே அவட்
கானபெயரும் ஞானசவுந்தரியே (க)

வ-ம்:—பிதா! சிலநாளைக்குமுன் நான் வேட்டைக்குச் சென்றிருந்த சமயம் எதிர்பாராத விதமாக அக்கானகத்தில் கர்த்தர் கிருபையால் என்னெதிர் வரக்கண்ட அழகிய சுந்தரி ஞானசவுந்தரி என்று பெயர்கொண்ட ஓர் பெண்மணிக்கு அபயதானம் கொடுத்து அழைத்து வந்திருக்கிறேன். அம்மங்கைக்கு சகல வனப்பும் சரியாயமைந்திருக்கிறது. ஆனால்,

பாட்டு ஷை மெட்டு

கையிரண்டில்லை கன்னிகையவட்கே
ஐயா அவளின் தந்தைதாயில்லை அவ
ளன்றிமற்றொருபெண்மேல் மனமில்லை (க)

வ-ம்:—இருகைகளும் கிடையாது. எப்பாதகரோ அவளது கைகளிரண்டையும் துண்டித்துவிட்டனர். அப்பெண்மணியைத் தவிர வேறு பெண்ணை விவாகம் செய்துகொள்ள என்மனமிசையாது.

மந்திரி. வ-ம்:—கண்மணி பிலேந்திரா! கையிழந்த பெண்ணைக் காட்டிற் கண்டழைத்து வந்து காப்பாற்றியது நன்மையே. ஆனால் அவளது குலாசாரம் தந்தை தாய் கால்வழி தெரியாமல் கல்யாணம் செய்துகொள்வேனென்பது பொருத்தமற்ற வார்த்தையாகும்.

பாட்டு

(ஞாயந்தானோநீர் என்ற மெட்டு)

பல்லவி

ஞாயமாகுமைந்தா இந்த
காட்டினிலடுக்காத வார்த்தைநீயுரைப்பது (ஞா)

அநுபல்லவி

ஜாதிகுலமறியாப்பெண்ணை நீ
தான்மணம்விரும்பின தென்ன
பாதிகையிழந்தவள்தன்னை பரி
பாலிப்பதெவ்வித முன்னே (ஞா)

சரணம்

எந்தகுலத்துதித்தமாது தன்னை
ஈன்றவர்பெயர் தெரியாது
சுந்தரவதியென்றிப்போது நீ
சுபமணம் புரியத் தகாது (ஞா)

வ-ம்:—பிலேந்திரா! உன் மனதிற்கு ரமித்த பெண்ணாயினும் அவளது குலம் கோத்திரம் தெரியாமல் விவாகம் செய்து கொள்ளக்கூடாது. அவ்விதம் செய்வது அவமானத்திற் கிடமாகும் இதை நன்றாய் யோசிக்கவேண்டும்.

பிலே. வ-ம்:—அப்பா! எல்லா விஷயத்தையும் யோசித்தே சொல்லுகிறேன். அப்பெண்ணின் குணதிசயமும் முகத்தோற்றமும் மேன்மையான வம்சத்தி லுதித்தவளாகவே தெரிகிறது. அப்பெண்ணைத் தவிர வேறு பெண்மீது என்மனம் நாடாது. அப்பெண்ணை வேண்டாமென்றால் எனக்கு விவாகமே வேண்டாம்.

சிமி. வ-ம்:—வத்ஸா! உன்னிஷ்டப்படியே ஆகட்டும்; மேல் நடக்க வேண்டிய விவாக காரியத்தை உன் மனம்போல் செய்துவைக்கிறேன் சஞ்சலப்படாதே சந்தோஷமாயிரு.

(சீன் முடிவு)

சீன்—11. இடம்:—தேவ மாதாகோவில்.

நடிகர்:—பிலேந்திரன், ஞானசௌந்தரி, பாதிரி, சிமியோன், பந்து ஜனங்கள்.

பாதிரி. வ-ம்:—பரம பிதாவாகிய தேவசந்நிதானத்தில் சுபயோக சுபதினமாகிய இன்று கூடியிருக்கும் சகோதரர்களே! சகோதரிகளே! திருமணக்கோலமுடன் இங்கு வந்திருக்கும் பிலேந்திரனும் ஞானசௌந்தரியும் விவாகம் செய்துக் கொள்ளப் போகிறார்களென்று அறிவிக்கிறேன். இவ்விருவரையும் பரிசுத்த விவாகத்தில் சேர்க்கக்கூடாத காரணமாவது நியாயமான தடையாவது உண்டென்று உங்களில் யாராகிலும் அறிந்திருந்தால் அதைத் தெரியப்படுத்த வேண்டும்.

பிரியமானவர்களே! இந்தப் புருஷனையும் இந்த ஸ்திரீயையும் நேர் முகத்திலும், இந்தச் சபைக்கு முன்பாகவும், பரிசுத்த விவாக நிலைமையில் சேர்க்கும்படி இவ்விடத்தில் வந்திருக்கிறோம். விவாகமானது மேன்மையுள்ள நிலைமையாயிருக்கிறது. அது மனுஷன் பாவம் செய்யாதிருந்தகாலத்தில் தேவனால் நியமிக்கப் பட்டதாயும், கிருஸ்த்துவுக்கும் அவர் திருச்சபைக்குமுள்ள ஞான ஐக்கியத்தைக் காட்டுகிறதாயும் இருக்கிறது. கிருஸ்து நாதர் (கலிலேயா) நாட்டிலுள்ள (கானா) ஊரில்நடந்த கலியாணத்திற்கு போயிருந்து முதலாம் அற்புதத்தைச்செய்து இந்தப் பரிசுத்த நிலைமையை மேன்மைப்படுத்திச் சிறப்பித்தார். அப்போஸ்தலனாகிய பவுலும், இது எல்லாராலும் கனமாக எண்ணப்படத்தக்கதென்று புகழ்ந்திருக்கின்றார். ஆகையால் இதை அற்பமாய் எண்ணி யோசனையில்லாமல் புத்தியில்லாத மிருகங்களைப்போல தேக இச்சைகளை நிறைவேற்ற வேண்டுமென்று விவாகம் செய்யாமல் விவாகம் நியமிக்கப்பட்ட முகாந்திரங்களை எண்ணி பயபக்தியோடும் விவேகத்தோடும் தகுந்த யோசனையோடும், தெளிந்த புத்தியோடும் தேவனுக்கு அஞ்சி விவாகம் செய்யவேண்டும்.

[வதூவரரைப் பார்த்து]

தேவ வசனத்துக்கு ஏற்காத வகையாய்ச் சேர்க்கப்பட்டவர்கள் சதிபதிகள் அல்லவென்றும், அவர்கள்செய்தது விவாகம் அல்லவென்றும், நீங்கள் அறிந்துகொள்ளுங்கள். ஆகையால், எல்லா இருதயங்களின் இரகசியங்களையும், வெளிப்படுத்தும் பயங்கரமான நியாயத் தீர்ப்புகளிலே நீங்கள் இருவரும் உத்தரவாதம் செய்ய வேண்டுவதால் நீங்கள் ஒழுங்கின்படி விவாகத்தினாலே சேர்க்கப்படக்கூடாத முகாந்திரம் உண்டென்று உங்களில் யாராகிலும் அறிந்திருந்தால் அதை இப்பொழுதே அறிவிக்க வேண்டுமென்று உங்கள் இருவருக்கும் கட்டளை இடுகின்றேன்.

[பிலேந்திரனிடம்]

நீ தேவநியமனத்தின்படி பரிசுத்த விவாகநிலைமையில் ஒருமித்து வாழ இந்த ஸ்திரீயை உனக்கு விவாகமனைவியாக ஏற்றுக் கொண்டு சுகத்திலும் துக்கத்திலும் இவளை நேசித்து ஆதரித்து கனப்படுத்திக் காப்பாற்றி நீங்களிருவரும் உயிரோடு இருக்குமளவும் பிறர்முகம்பாராமல் இவளுக்கே புருஷனாயிருப்பாயா?

பிலே. வ-ப்:—இருப்பேன். [ஞானமிடம்]

நீ தேவநியமனத்தின்படி பரிசுத்த விவாக நிலைமையில் ஒருமித்து வாழ இந்த மனுஷனை உனக்கு விவாக புருஷனாக ஏற்றுக் கொண்டு இவனுக்குக் கீழ்ப்படிந்து பணிவிடைசெய்து சுகத்

திலும் துக்கத்திலும் இவனை நேசித்துக் கனப்படுத்திக் காப்பாற்றி நீங்கள் இருவரும் உயிரோடு இருக்குமளவும் பிறர்முகம் பாராமல் இவனுக்கு மனைவியா இருப்பாயா?

ஞானம் வ-ம்:—இருப்பேன்.

(பாதிரியார் சொல்லி வர)

பிலே. வ-ம்:—பிலேந்திரனாகிய நான் ஞானசௌந்தரியாகிய உன்னை இன்றுமுதல் எனக்கு விவாக மனைவியாக ஏற்றுக்கொண்டு தேவனுடைய பரிசுத்த நியமனத்தின்படி நன்மையிலும் தீமையிலும், வாழ்விலும், தாழ்விலும், சுகத்திலும், துக்கத்திலும், மரணம் நம்மைப் பிரிக்குமளவும் உன்னை நேசிக்கவும் ஆதரிக்கவும் வாக்குக் கொடுக்கிறேன்.

(பாதிரியார் சொல்லி வர)

ஞான. வ-ம்:—ஞானசௌந்தரியாகிய நான் பிலேந்திரனாகிய உன்னை இன்றுமுதல் விவாக புருஷனாக ஏற்றுக்கொண்டு தேவனுடைய பரிசுத்த நியமனத்தின்படி நன்மையிலும், தீமையிலும், வாழ்விலும், தாழ்விலும், சுகத்திலும், துக்கத்திலும், மரணம் நம்மைப் பிரிக்குமளவும் உன்னை நேசிக்கவும், ஆதரிக்கவும், உனக்குக் கீழ்ப்படியவும் வாக்குக் கொடுக்கிறேன்.

(பாதிரியார் சொல்லிவர)

பிலே. வ-ம்:—இந்த மாங்கலியத்தினாலே நான் உன்னை விவாகம் செய்து என் சரீரத்தினாலே உன்னை மேன்மைப்படுத்தி எனக்கு உண்டானலோக ஆஸ்திகளையெல்லாம் உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கிறேன். பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஆமென், [மாலை சூடுகின்றனர்]

பாதிரி வ-ம்:—தேவனாகிய பிதா தேவனாகிய குமாரன் தேவனாகிய பரிசுத்த ஆவி உங்களை ஆசிர்வதித்துக் காத்து ஆதரிக்கக்கடவாராக. கர்த்தர் கிருபைகூர்ந்து உங்களை இரக்கமாய்க் கண்ணோக்கக்கடவர். நீங்கள் மறுமையிலே நித்யஜீவனை அடையத்தக்கதாக இம்மையிலே ஒருவருக்கொருவர் ஆதாரவாய் வாழும்படி கர்த்தர் உங்களைச் சகல ஆசிர்வாதத்தினாலும் கிருபையினாலும் நிரப்பக்கடவர் ஆமென்.

ஆபிரகாமின்தேவனே! ஈசாக்கின்தேவனே! யாக்கோபின்தேவனே! உமது அடியாராகிய இவர்களை ஆசிர்வதித்து இவர்கள் உமது பரிசுத்த வசனத்தினால் கற்றுக்கொள்ளும் பிரயோஜனமான காரியங்கள் எவைகளோ அவைகளின்படி உண்மையாய் நடக்க நித்திய ஜீவவிதையை இவர்கள் இருதயத்திலே விதைத்தருளும். ஆண்டவரே! பரலோகத்திலிருந்து இவர்களை இரக்க

மாய்க் கண்ணுக்கி ஆசீர்வதியும் ஆபிரகாமுக்கும் சாராளுக்கும் மிகுந்த சந்தோஷம் உண்டாக தேவரீர் உமது ஆசீர்வாதத்தை அருளினதுபோல உமது அடியாராகிய இவர்கள் உமது சித்தத்திற்கு அடங்கி நடந்து எப்பொழுதும் தேவரீராலே சேதமின்றிக் காக்கப்பட்டு ஜீவனுள்ளளவும் உம்மில் அன்பு கூறுகிறவர்களாய் நிலைத்திருக்கும்படி எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உமது ஆசீர்வாதத்தை இவர்களுக்கு அனுக்கிரகஞ் செய்யும் ஆமென்.

(போகின்றனர்)

(சீன் முடிவு)

சீன்:—12.

[டீ பார்டி நடந்து எல்லோரும் விவாகத் திருவிழா கொண்டாடுதல் டான்ஸ் நடக்கும். இந்த சீன் பட்ளர் விகடம்]

(சீன் முடிவு)

சீன்—13. இடம்:—ஏகாந்தமாடி.

நடிகர்;—தர்மராஜர், சேனாதிபதி, மந்திரி காவலன்.

தர். வ-ம்:—மந்திரி! எனதருமை ஞானசவுந்தரி பிரிந்த சோகத்தால் மனம் வருந்தியிருக்கும் இந்த சமயம் டர்க்கி சுல்தானானவன் யுத்தத்திற்கு வருவதாக செய்தி அனுப்பியிருக்கிறான் சுல்தான் நம்மீது படைஎடுக்க நேர்ந்த காரணமென்ன?

மந். வ-ம்:—நமது பாதிரிமார்கள் துருக்கி தேசத்திற் பிரவேசித்து அத்தேசக்குடிகளுக்கு நமது வேதமார்க்கத்தை போதித்தும் ஆங்காங்கு கர்த்தருடைய ஆலயங்களை நியமித்து வருகின்ற காரணத்தையே ஆதாரமாகக் கொண்டு சுல்தான் நம்மீது படைஎடுத்து வருவதாக தெரிகிறது.

[சேனாதிபதி வந்து]

சேனாதிபதி பாட்டு

(தில்குஷதா தியசமன் என்ற மெட்டு)

பல்லவி

வேந்தனே விண்ணப்பமதைக் கேட்டருள்வீரே
கேட்டருள்வீரே துயர்
தீர்த்தருள்வீரே (வே)

அநுபல்லவி

சாந்த மில்லாமலந்த டர்க்கி சுல்த்தானே
டர்க்கி சுல்த்தானே சண்
டைக்கு வந்தானே (வே)

சரணம்

ஊரெங்கும் போர்வீரர் ஓடித்திரிகின்றார்
உபபலம் வேண்டும் நல்
ஜெயமது தோன்றும் (வே)

வ-ம்:—அரசே! துருக்கிதேசத்து சுல்த்தானது சைன்யங்கள் நக ருக்கு சுமீபத்தில் வந்து இறங்கி யுத்தத்தை எதிர்நோக்கி இருக் கின்றனர். நமக்கோ போதியபடைத் துணையில்லை என்னால் இயன்றவரை தயார் செய்யப்பட்ட அனேகம் போர்வீரர்கள் இருந்தாலும் ஏராளமான துருக்கிய சிப்பாய்களுடன் எதிர்ப் பது கஷ்டமாயிருக்கிறது இதைத் தங்களிடம் தெரிவித்துப் போகவே வந்தேன்.

தர்மர் பாட்டு

(சரஸாஜாலமேன் என்ற மெட்டு)

பல்லவி

அஞ்சாதே அஞ்சாதே செல்வாய்
வெகு-ஆணவ மிகுத்தடர்க்கி ராஜனை ஜெயித்திட (அஞ்)

அநுபல்லவி

தஞ்சமென்றே ஜேசுவின்
தன்னருளதனைப் போற்றி
சஞ்சலமின்றிநமது சைனியங்களுடனே (அஞ்)

சரணம்

தைரியத்துடன் வந்து
வசனியங்களை நிறுத்தி
வைரியைத் தோற்கச்செய்யலாம்
வந்தடர்க்கி சேனைக்கே (அஞ்)

வ-ம்:—எதற்கும் அஞ்சவேண்டாம் நமது சேனைசைனியங்களை சித் தப்படுத்து நான் உடனே எனது சினேகிதனை சிமியோனுக் குக் கடிதமெழுதி படைத்துணைவரும்படி தெரிவிக்கிறேன் கர்த் தர் கிருபையுண்டு பயப்படாதே சீக்கிரம் செல்.

(சீன் முடிவு)

சீன்—14. இடம் :—தர்பார்.

நடிகர்;—சிமியோன், பிலேந்திரன், தூதன்.

சிமி. வ-ம்:—பிலேந்திரா ! தர்மராஜனுக்கும் துருக்கி சுல்த்தானுக்கும் யுத்தம் நேரிட்டிருப்பதாக தெரிகிறது. இந்த யுத்தம் நமது வேதமார்க்கத்தை பற்றியதாயிருப்பதால் நாமும் இதற்கு வேண்டிய சகாயம் செய்யவேண்டும்.

[பிலேந்திரன் வெளியே பார்த்து]

பிலே. வ-ம்;—ஆமாம் ; இதோ ஓர் தூதன் வருகிறுன்.

[தூதன் வெளிவந்து]

தூத. வ-ம்:—அரசே வந்தனம் சக்ரவர்த்தி தருமராஜரிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது.

[சிமியோன் கடிதத்தை வாங்கிக் கொண்டு]

சிமி. வ-ம்:—நல்லது ; நீ செல்.

(கடிதத்தைப் படித்து) பிலேந்திரா ! நாம் பேசிக்கொண்டபடி தர்ம ராஜன் படைத்துணைக்கோரி எழுதியிருக்கிறுன் நமது சைனியங்களுடன் நான் சென்று வருகிறேன் உத்திரவு கொடு.

பிலேந்திரன் விருத்தம்

படைத்துணையாகச்சென்று பகைத்தவர் தம்மைக்கொன்று
திடத்துடன் தருமராஜன் ஜெயம்பெறச் செய்வேனையா
நடுத்தரமான காலம் நாட்டைவிட் டேகவேண்டாம்
தடுத்திட்டேனென் றெண்ணுமல் தனையனை யனுப்புவீரே.

பிதா. வ-ம்:—இந்த யுத்தத்திற்குத் தாங்கள் செல்லவேண்டியது இல்லை யுத்தம் செய்யவும் தங்களால் இயலாது ஆகவே நானே நமது போர் வீரருடன் சென்று தர்மராஜனுக்குத் துணைசெய்து ஜெயம் பெற்று வருகிறேன்.

சிமி. வ-ம்:—ஆசீர்வாதம் தெய்வ பிதாவின் திருவருளால் ஜெயத்துடன் திரும்புவாய். (செல்கின்றனர்)

(சீன் முடிவு)

சீன்—15. இடம்:— அந்தப்புரம்.

நடிகர்:—பிலேந்திரன், ஞானம்.

பிலேந்திரன் பாட்டு

(இராஜவிசு வாச்லாலா என்ற மெட்டு)

அந்தமிகுந்தஞான சவுந்தரியே ஞான சவுந்தரியே
தந்தருள் விடையே
தந்தை சொற்படியே
தர்மராஜர்க்குத்துணை சென்றுவாரேன்
துணைசென்று வாரேன் (அந்)

மாமியோ டிருப்பாய்
மனமிகக் களிப்பாய்
வருவேன் சென்று விரைவில்
விடை கொடுப்பாய்
கண்ணே விடைகொடுப்பாய் (அந்)

பிலே. வ-ம்:—பெண்ணே! தற்சமயம் நமது சக்ரவர்த்தியாகிய தர்ம ராஜருக்கும் துருக்கி சுல்த்தானுக்கும் நமது வேத மார்க்கமாக நடந்த யுத்தத்திற்கு படைத்துணையாகச் சென்று வருகிறேன். அவரும் எங்களைப் படைத்துணை வரும்படி கோரி யிருக்கிறார் எனது பிதாவும் சென்றுவர உத்திரவு கொடுத்தார் ஸைனியங் களும் பிரயாணத்திற்கு சர்வ சித்தமாயிருக்கின்றன. ஆதலின் சிந்தை மகிழ்ந்து சென்றுவர உத்தரவு கொடு.

ஞானம் பாட்டு

(சுந்தரபியாரி மைகோ என்ற மெட்டு)

தருமதுரையே என்னை தனியாய்விடத் தர்மமா
தனியாய்விடத் தர்மமா நினையாதது கர்மமா (தரு)

பிரிய மனமில்லையே பிராணநாதா உன்னையே
பிராணநாதா உன்னையே நானம்பினே னினியே (தரு)

பூரண கெற்பமானேன் புகலிடம் வேறுகாணேன்
புகலிடம்வேறுகாணேன் போகலாகாது தானே (தரு)

வ-ம்;—நாதா! தாங்கள் இம் மகா யுத்தத்திற்கு சகாயம் செய்யச் செல்வது மிகவும் நல்லதே; அதிலும் புண்ணிய சீலராகிய தர்ம ராஜனுக்கு துணை புரிவது புகழத்தக்கதே எனினும் எனது சந் தர்ப்பம் தெரியாமல் கையற்றவென்னை இங்கு தனியாய் விட்டுச் செல்வது நல்லதல்ல நாதனே இப்போது பூரண கெற்பவதியா யிருக்கிறேன். ஆயிரம் தாதிகள் அங்கிருந்து ஏவல் புரிவதும்

சரி! தாங்கள் ஒருவர் என்னைவிட்டுப் பிரியாதிருப்பதும் சரி! ஆகவே ப்ராணேசா இந்த சமயம் தாங்கள் யுத்தத்திற்குச் செல்லப்படாது.

தர்க்கம்

(நீகேதகுரா என்ற மெட்டு)

பிலேக். மானே செந்தேனே
மயிலே குயிலே-மட
மானேமனங் கலங்கலேனே
துரிதம் வருவேனே
ஜெயமும் பெறுவேனே
தருவாய் விடைதானே சரஸசுக (மா)

ஞானம். மாரா சிங்காரா
மதனை கமனை ப்ராண
மாரா மகிதல குபேரா
எனைப் பிரிதல் நேரா
தனியிருக்க சீரா விஜயஜெய (மா)

பிலேக். ஏது இங்குனக் கென்னதீது
வருமிதை யெண்ணாது
வருந்துவ தாகாது
வருவேன் சென்றிப்போது-மதனரதி (மா)

ஞானம். ராஜா ரமணிய விலாசா
நலமிதல்ல நேசா
நலமருள் விஸ்வாசா-நயனசுக

ஞானம். வ-ம்:—ப்ராணேசா! தாங்கள் செல்வது ஒரு சிறிதும் எனக் கிஷ்டமில்லை. தாங்கள் இங்கு என்னைத் தனியாய் விட்டுச் சென்றால் எனக்கேதாவது கெடுதி நேரிடுமென்று என் மனம் திப்பிரமை யடைகிறது.

பிலே. வ-ம்:—பெண்ணே! ஞானசவுந்தரி இந்த ராஜ்பத்திற்கும் ராஜ மாளிகைக்கும் தலைமை ஸ்தானத்தில் வீற்றிருக்கும் உனக்கு நானில்லா விட்டால் எக்கெடுதியும் நேராது எனது தாய்தந்தை யரும் என்னைவிட பதின்மடங் கதிகமாக உன்னைப் பார்த்துக் கொள்வார்கள். எல்லாவற்றிற்கும் இயேசு நாதன்கிருபையுண்டு தடைசொல்லாதே! தைரியமாயிரு நான் சென்று வருகிறேன்.

(சீன் முடிவு) [போகிறான்]

சீன்—16. இடம்:—யுத்தகளம்.

நடிகர்:—பிலேந்திரன், தர்மராஜன், சுல்த்தான், டர்க்கி சேனை, தர்மராஜ சேனைகள், சம்மன்சுகள்.

சல்த் வ-ம்:—அரே கிறிஸ்துங்களா! நம்ளிக்கு ஊரெல்லாம் உவுங்க ஏசுவுங்க வேதம் படிச்சூரங்கோ அந்த பெரம்மனகி எல்லாம் நம்ம ஜெயில்போட்டு சண்டைக்கி வந்தாங்கோ. வாங்கோடா உங்களக்கி எல்லாம் சமாதி பண்ருங்கோ நம்பசைன்யங்கோ.

தர். வ-ம்:—அடே போர்வீரர்காள்! துஷ்டர்களாகிய துருக்கியர் களுக்கு அஞ்சவேண்டாம். ஏராளமான சேனைகளுடன் பிலேந் திரராஜன் நமக்குதவிசெய்ய வந்திருக்கிறார் தைரியமாக நின்று சண்டை செய்யுங்கள்.

[இருதாத்தாரும் சண்டை செய்கின்றனர் தர்மராஜனும் பிலேந்திரனும் தோல்வி யடைந்து ஏசுநாதரை நோக்கி ஸ்தோத் திரம் செய்கின்றனர்.]

தர்மர் பிலேந்திரன் பாட்டு

(தந்தருள் காட்சி என்ற மெட்டு)

மார்க்கவிலாசா மாசில்ப்ரகாசா
தேவா நீவாவா எமைக்காவா
மானிலமெங்கு மேபுகழ்தங்கு
மாதவா அனாதை ரக்ஷகா (மா)

தீனதயாளா தேன்மலர்த்தாளா
ஜேசுவே பூலோக தேசிகா (மார்)

[அந்தரத்திலிருந்து சம்மன்ஸ்கள் தோன்றுகின்றனர்]

சம்மன்ஸ்கள் பாட்டு

(ஆஹாயிதென்ன என்ற மெட்டு)

அஞ்சாதீர் அஞ்சாதீர் வந்தோமிப்போது
ஆதரவுசெய்குமோமே தப்பாது (அ)

பொல்லாதவஞ்சக ரில்லாமல்கொல்வோம்
பூமிபாரந்தீர்த்து வானடுசெல்வோம் (அ)

தேவபிதாதூதர் நாமேதெரிவீர்
ஜேசுவின்சம்மன்சு நாமேயறிவீர் (அ)

சம்ம. வ-ம்:—ஏ பிலேந்திர தருமராஜன் நீங்கள் யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம். பரமபிதாவின் வேதமார்க்கத்தை யுலகில் பர

வசசெய்த நன்மைக்கு தீமைவிளைத்த சண்டாளர்களை ஜெயித்து உங்களுக்கு வெற்றியைத் தருவோம். பாபகிர்த்தியமில்லாதபரிசுத்தமாகிய பரமண்டலங்களில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் தீன ரக்ஷகனாகிய ஜேசுநாதன் கட்டளைப்படி அவரின் திருத்தொண்டர்கள் சம்மன்ஸ்களாகிய நாங்கள் உங்கள் முன் விஜயம் செய்தோம். ஆண்டவன் அருளுக்கு பாத்திரமானவரே உங்கள் கஷ்டம் விலகி வெற்றிபெற்று சுகஜீவியாயிருக்க காக்ஷி தரும்படி ஆக்ஷியான வேதரகஸ்யங்களை போதித்து தேவபிதாவாகிய கர்த்தர் எங்களை அனுப்பினார் பயம் விடுங்கள்; இதோ இம்மந்திரவாளைப் பெற்றுக்கொள்ளுங்கள். சந்தோஷமாயிருங்கள் ஜெயம் பெறுங்கள்; ஆமென்.

[மறுபடியும் யுத்தம் ஆரம்பிக்க தர்ம ராஜன் பிலேந்திரன் முதலியோர் வெற்றிபெற சுல்த்தான் தோல்வியடைகிறான்]

(சீன் முடிவு)

சீன்—17. இடம்:—சிமியோன் ஏகாந்தம்.

நடிகர்:—சிமியோன், தோழி, காவலன், தூதர்கள்.

சிமி. வ-ம்:—அடே காவலன்! தர்மராஜரிடமிருந்து நேற்றைய செய்தி ஏதாவது ஒற்றர்கள் மூலம் தெரிந்ததா.

காவ. வ-ம்:—இதுவரையில் சுல்த்தானுக்கே ஜெயமென்று சொன்னார்கள். நேற்றைய விஷயமெப்படியோ? இன்று தெரியவரும்.

[தோழி வெளிவந்து]

தோழி வ-ம்:—அரசே! தங்கள் மருகி எம் இளவரசியார் இன்று சூரியோதயம் இரண்டு ஆண் குழந்தைகளைப் பெற்றனர். கடவுள் கருணையால் தாயும் சேயும் தேக சுகமாயிருக்கின்றனர்.

சிமியோன் விருத்தம்

நல்லதுஜேசுநாதன் நன்மையாற்பிறந்தயெந்தன்
செல்வராம்பாலர் தன்னை திடமுடன்பாதுகாப்பீர்
சொல்லரும்எகிப்துதேசம் துலங்கியஜனங்கட்கிந்த
நல்லதோர்சேதிதன்னை நலமுடன்தெரிவிப்பேனே.

சிமி. வ-ம்:—சந்தோஷம்! சர்வ ஜாக்கிரதையாகக் கவனியுங்கள்.

[தோழி போனபின்]

காவலா ! வெளியூர்ப் பிரயாண வேவுகாரர்களை அழைத்துவா

[காவலன் போகிருன். சிமியோன் கடிதமெழுதி முடித்ததும் வேவு காரர்வந்து வணங்குகின்றனர்]

சிமி. வ-ம்:—அடே தூதர்காள்! இக்கடிதத்தைக் கொண்டு சென்று நமது பிலேந்திரனிடங் கொடுத்து அவசியம் அழைத்து வாருங் கள். [போகின்றனர்]

(சீன் முடிவு)

சீன்—18. இடம் :—யுத்தவெளிப்புரம் கூடாரம்.

நடிகர்:—தர்மராஜன், பிலேந்திரன். போர்வீரர்கள், தூதுவர்.

[தர்மராஜ பிலேந்திர ரிருவரும் யுத்த விஷயத்தைப் பேசிக்கொண் டிருக் கின்றனர். தூதுவர் சென்று]

தூது. வ-ம்:—அரசே! வந்தனம்.

பிலே. வ-ம்:—தூதர்காள் என் என்ன காரணம் எதற்காக இத்தனை அவசரமாக வந்தீர்கள். விசேஷ மென்ன ?

தூது. வ-ம்:—இளவரசே ; தமதருமைப் பிதா ஓர் கடிதங் கொடுத் தார். தங்களை உடனே அழைத்துவரக் கட்டளை யிட்டார்.

[பிலேந்திரன் கடிதத்தை வாங்கி வாசித்தல்]

பிலே. வ-ம்:—அன்பும் பிரியமுமுள்ள திருக்குமாரனை பிலேந்திர ராஜனுக்கு கர்த்தர் கிருபையால் சகல பாக்கியமும் மென் மேலும் உண்டாகும்படிக்கு ஆசீர்வாதம் உபயக்ஷேமம். இப்ப வும் உனது அருமை மனைவி ஞானசவுந்தரி பரம பிதாவின் திரு வருளால் இரண்டு புத்திரரை பெற்றெடுத்தாள். கடவுள் கிரு பையால் தாயுஞ் சேயும் சுகமாயிருக்கின்றனர். இந்தக் கடிதங் கண்ட தட்சணம் நீ பிரயாணமாகி உடனே வரவும்.

இப்படிக்கு
ராஜா சிமியோன்

தர். வ-ம்;—பரம பிதாவின் பரிபாலன மிதுவேயாகும். பிலேந் திரரே. நமது வீர ப்ரதாபத்தால் ஜெயம்பெற்ற புகழ் என் றென்றும் நின்றுலவ கடவுள் தமக்குப் புத்திர பாக்கியங் கொடுத்தார். சந்தோஷம்.

[பிலேந்திரன் மறுகடித மெழுதிக் கொடுத்து]

பிலே. வ-ம்:—தூதர்கள் இக் கடிதத்தை என் தந்தையிடங் கொடுங்கள். இவ்விடத்திய ஜெயபேரிகை முழக்கத்தையுஞ் சொல்லுங்கள். நாளையதினம் பிரயாணமாகி வருகிறேன். விரைவில் செல்லுங்கள்.

[தூதர்கள் கடிதத்தை வாங்கிக்கொண்டு செல்கின்றனர்.]

(சீன் முடிவு)

சீன்—19. இடம்:—லேனாள் வீடு.

நடிகர்:—லேனாள், தூதர்கள், காவலன்.

லேனா. வ-ம்:—சிமியோனிட மிருந்து இவ்வழியாகச் சென்று தூதர்கள் ஞானசவுந்தரி இரண்டு குழந்தை பெற்றாள் பிலேந்திரருக்கு கடிதங்கொண்டு போகிறோமென்று சொல்லிப் போனார்கள்.

ஞானசவுந்தரி என்ற பெயரைக் கேட்டதுமுதல் என் மனம் என் வசத்திலில்லை. சக்காளத்தி மகள்தானா! அல்லது வேறு ஞான சௌந்தரியா கொலைஞர்கள் அவளைக்கொன்று விட்டதாக இரண்டு கைகளை அறிகுறியாகக் கொண்டுவந்து காட்டினர். அவள் இறந்திருந்தால் அப்பெயர் இப்போது பிரசித்தமாவதற்குக் காரணமில்லை. (யோசித்து)

எதற்கும் நமது தந்திரத்தால் மெல்ல விசாரித் தறியலாம். அத்தூதரை கூட்டிவரப்போன காவலன் இன்னும் வரவில்லையே.

[காவலன் தூதருடன் வருகின்றான்]

தூத. வ-ப்:—அம்மா! மகாராணி ப்ராக்.

லேனா. வ-ம்:—பிலேந்திர ராஜரைக் கண்டீர்களா? கடிதங் கொடுத்ததற்கு என்ன தெரிவித்தார்.

தூத. வ-ப்:—மறுகடிதங் கொடுத்தார். நாளையதினம் பிரயாணமாவதாகத் தெரிவித்தார்.

லேனா. வ-ம்:—சந்தோஷம்; இவ்வூர் அதிசயங்களையும் ராஜமாளிகைகளையும் பார்த்தீர்களா?

தூத. வ-ம்:—இது சமயம் அதற்குத் தோதில்லை; மறுமுறைதான் வந்து பார்க்கவேண்டும்.

லேனா வ-ம்:—நல்லது! உங்கள் இளவரசருக்கு எங்கே பெண்ணெடுத்து விவாகம் செய்தார்கள்.

தூதர். வ-ம்:—அந்தம்மாள் பிறந்து வளர்ந்த ராஜ்ஜியம் எங்களுக்குத் தெரியாது. இளவரசர் வேட்டைக்குச் சென்ற இடத்தில்

கொல்லைர்களால் கைகள் வெட்டுண்டு கிடந்த அப் பெண்ணைக் கூட்டிவந்து ரணசிகிச்சை செய்து பாதுகாத்து விவாகம் செய்து கொண்டார்.

லேனு. வ-ம்:—அப்படி நேர்ந்ததும் ஆச்சர்யம் தான். நல்லது இவ்வி டம் தங்கிப் போகவும் இயலாதென்கின்றீர். எனது பேட்டி யைப் பார்த்தும் நீங்கள் சும்மாய்ப் போவது தகாது உங்களுக் குத் தேவையான பொருளைக் கேளுங்கள் தருகிறேன்.

தூத. வ-ம்:—தங்கள் இஷ்டம்! எங்கள் அதிஷ்டம்!

லேனு. வ-ம்:—என்னவேண்டும். கேட்பதற்கு சங்கை வேண்டாம்

பாட்டு

(நானே பாக்கியசாலி என்றமெட்டு)

சீனி—லட்டு மிட்டாய் பிஸ்கோத்
ரொட்டி வாழைப்பழம்
ரஸ்தாளி ஆப்பில் கமலா
ஆரஞ்சி பழம் வேணுமா
பீர்—புட்டி பிராந்தி வுஸ்கி
பட்டை மதுபானம்
பூரியுடன் குருமா
கோழி கறிபுலவு வேணுமா
நல்ல பட்டுபட்டா வளிகள் வேணுமா
வெகு துட்டுபவுன் நோட்டுவேணுமா
பரிவுடன் தருகுவேன் புகலுவீர் (சீனி)

வ-ம்:—பயமின்றி வேண்டிய வஸ்துவைக் கேளுங்கள். இவ்வூர் மது பான வகைகள் மதுரமாக இருக்கும்.

தூதர். வ-ம்:—அதுதான் பரிக்ஷை பார்க்கவேண்டும். எங்களூர் சாராயம் எங்களுக்கு ஜலங் குடித்ததுபோல் தான். இவ்வூர் சாராயம் எப்படி யிருக்குமோ பார்க்கவேண்டும்.

லேனு. வ-ம்:—அடே! காவலன் இவர்களுக்கு வேண்டிய மதுபான வகைகளைக் கொடுத்தனுப்பு.

[காவலன் சாராயபுட்டிகள் கொண்டு வந்து கொடுக்க தூதவர் வாங்கிக் குடித்துப் பலவிதம் ஆடிப்பாடி வெறி மிகுதியால் அவ்விடமே படுத்து உறங்குகின்றனர். லேனு வெளிவந்து தூதர்வசமிருந்த கடி தத்தை எடுத்து வாசித்தல்.]

லேஞ. வ-ம்:—அருமைப் பிதாவின் திருச்சந்திதானத்திற்கு நமஸ்கார விண்ணப்பம். உபய க்ஷேமம். இவ்விடம் யுத்தத்தில் வெற்றி நமக்கே. நாளையதினம் பிரயாணப்படுத்துகிறேன். குழந்தைகளையும் ஞானசௌந்தரியையும் சர்வ ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளவும். இங்ஙனம்:

குமாரன் பிலேந்திரன்.

பாட்டு

(வாலவயதுவந்து என்ற மெட்டு)

கண்ணிகள்

நானென்றையெண்ணிடத் தானென்றுய்நேர்ந்ததென்
செய்குவேன் எவ்வா றுய்குவேன் அந்த
ஞானசௌந்தரிபக்கந் தானேதெய்வமும்நின்று
விட்டதே என்கை விட்டதே (நா)

பட்டும்பலனில்லாமல் கெட்டபெயரெடுக்க
லானேனே மதி யீனனே அந்தப்
பாவிமழுவனவள் ஆவிதனைக்கொல்லாது
செய்தானே சூது செய்தானே (நா)

மன்னனிதையறிந்தால் என்னைக்கொலைசெய்குவா
ருண்மையே என்ன பெண்மையே இந்த
மங்கையெனைரட்சிக்க இங்குவருவாய்மலர்ப்
பாதனே யேசு நாதனே (நா)

லேஞ வ-ம்;—"தன்வினை தன்னைச்சுடும்; ஒன்றைநினைக்கில் ஒன்று வரும்" என்பது உண்மையானது. நான் எவ்வளவு சூட்சுமம் செய்தும் என்ன பிரயோசனம். ஆம்; இவள் உயிர் தப்பிப் பிழைத்த நமது சக்காளத்திமகள் ஞானமென்பதில் தடையில்லை. இதற்கென் செய்வது. எவ்விதத்தும் இவளைக்கொன்று போடுவதே உத்தமம். இல்லையானல், எப்படியாகிலும் என் உயிருக் கொருகாலத்தில் கெடுதி விளையும். ஆம்; இதற்கு யோசனை என்ன? (யோசித்து) அதுதான் சரி; இக்கடிதத்தில் எழுதியிருக்கும் குழந்தைகளையும் ஞானசௌந்தரியையும் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளவும் என்பதை தாக்ஷன்யமின்றிக் கொள்ளவும் என்று திருத்திவிடுகிறேன்.

[கடிதத்தை மாற்றி எழுதி தூதர் மடியில் வைத்துவிட்டு அவர்களை அடித்துத் துரத்திவிடுகிருள்]

(சீன் முடிவு)

சீன்—20. இடம்—சிமியோன் ஏகாந்தம்.

நடிகர்:—சிமியோன், தூதுவர்.

[தூதுவர் ஓடோடிவந்து நமஸ்கரித்துக் கடிதத்தைக் கொடுக்கின்றனர். சிமியோன் கடிதத்தை வாசித்து]

சிமியோன் பாட்டு

(தாரணியிலன்புகொண்ட என்ற மெட்டு)

பல்லவி

காரணமென்னவோ யிந்தக்
கடித வாசகம்
கடித வாசகம் பாலர்
மடியு மோர்விதம் (கா)

அநுபல்லவி

தாரணியிலேஞான சவுந்தரிமீதுகுற்றம்
யாரறிந்தார் பிலேந்திரனிவ்வா
றறிவித் தானேயோ
அறிவித் தானேயோ கொல்லத்
தெரிவித் தானேயோ (கா)

சரணம்

மைந்தருடன்மனைவிதன்னை மாவனத்திற்கொல்வீரென்று
இந்தக்கடிதம்யெழுதிய தேனெனக்கின்று
ஏனெனக்கின்று வினை யேயிதுநன்று (கார)

சிமி. வ-ம்:—ஆ இதென்ன ஆச்சரியம். கானகத்தில் கைகளிழந்து அனாதையாகவந்த அப்பெண் வேண்டாமென்று தடுத்ததை மறுத்துத் தானேவிரும்பி விவாகம் செய்துகொண்டான். கர்த்தர் கிருபையால் குழந்தைகள் பிறந்ததென்று கடிதம்விட குழந்தைகளையும் ஞானசௌந்தரியையும் கொன்று விடவேண்டும். இல்லையானால், நான் ஊருக்குள் பிரவேசிக்கமாட்டேன் என்று கர்னகடூரமாகக் கடிதம் எழுதியிருக்கும் காரணம் தெரியவில்லை. (யோசித்து) ஏதுவோ விபரீத விஷய மிருக்க வேண்டும். இல்லையானல், இப்படி எழுதமார்க்கமில்லை. நமக்கேன் இந்தத்தொல்லை. குழந்தைகளைக் கொல்வதைக் காட்டிலும் பழையபடி கானகத்தில் விட்டுவிடும்படிக் கட்டளை யிடுவோம். பின் தெய்வப் பிரயத்தனப்படி நடக்கட்டும். [போகிறான்]

(சீன் முடிவு)

சீன்—21. இடம்:—கானகம்.

நடிகர்:—முனீஸ்வரர், ஞானசௌந்தரி, குழந்தைகள்.

ஞானசௌந்தரி பாட்டு

(கானகத்தில் நாமலேய என்ற மெட்டு)

ஏதுசெய்வேன் யேசுநாதா
இட்டையோ எனக்கிவ்விதி
காதலுடன் மணர்ந்தமன்னன்
கானகம் விட்டதும்விதி (ஏது)

மைந்தருடனே இக்காட்டில்
மயங்கலாகி னேனேநங்கை
இந்தவிதம் நேருமென்று
எண்ணுமற்போ னேனேமங்கை (ஏது)

கையிழந்து குழந்தையீன்று
கானகத்தில் வாடிடவே
தெய்வமேயுன் சம்மதியோ
தெரிகிலேன்முன் செய்ததீதோ (ஏது)

ஞான. வ-ம்:—ஆ ஜேசுநாதா! தீனரக்ஷகா! எக்குற்றத்தையுங் கருதாமல் எக்காரணமுமின்றி என்னையேன் வெறுத்தார் பிராணபதி. அவருக்கு நான் செய்த தீங்கென்ன? ஐயோ! கையிழந்த பாவியாச்சே? சிறு குழந்தைகளை எப்படிக் காப்பாற்றுவேன். அடர்ந்த இவ்வாரண்யத்தில் எனக்கு துணைசெய்வாரெவர். தேவபிதாவே! மரியாயித்தாயே! ஆதரவற்ற என்னைக் காப்பாற்ற வேண்டும்.

[முனீஸ்வரர் பிராப்தம்]

முனீ. வ-ம்:—யாரிது. ஓர் பெண் இரண்டு குழந்தைகளுடன் காட்டில் தனித்துநின்று புலம்புகின்றுள். இவ்வாரண்யத்தில் இக்கன்னிகை இங்குவரக் காரணமென்ன? வரலாறிந்து அம்மங்கைக்கேற்ற உதவி செய்யவேண்டும்.

[அருகில் சென்று ஞானத்தைக் கண்டு]

அம்மா! அஞ்சவேண்டாம். எங்கிருப்பவள்? யார் பெற்ற குழந்தை? இத்துன்பத்துடன் இங்கு வரவேண்டிய காரணமென்ன?

ஞானசௌந்தரி பாட்டு

(அரசே கோபங்கொள்ள என்ற மெட்டு)

பல்லவி

முனியேநானொருபெண் காட்டில்வந்தேன்
தனிவனமீது சார்ந்தேபிப்போது (முனி)

அநுபல்லவி

இனியேதுசெய்வேன் எவ்விதமுய்வேன்
எனையாளவேணும் எந்தைநீர்காணும் (முனி)

சரணம்

அனியாயமாக அடைந்தேனித்துன்பம்
வினைதீர்க்கவேணும் வேளைநீர்காணும் (முனி)

ஞான. வ-ம்:—பிரபு! நானோர் திக்கற்ற பெண். காலவிதிவசத்தால் கைகளை இழந்து பின் கர்த்தர் கிருபையால் ஓரரச குமாரரை மணந்து புத்திரரைப் பெற்று மீண்டும் எனைத்தொடர்ந்த கொடிய வினைவசத்தால் சகல சம்பத்தையும் பர்த்தாவையும் பிரிந்து இப்பாலக ரிருவருடன் இக்காட்டில்வந்து பாதவிக்க நேர்ந்தது. கர்த்தர் கிருபையால் தங்கள் தெரிசனம்பெற்றேன்!

முனீஸ்வரர் பாட்டு

(காந்திரிஷி என்ற மெட்டு)

பல்லவி

கலங்காதேமா கர்த்தர்
காப்பாற்றுவா ருந்தனை (கல)

அநுபல்லவி

தலமிதிலவரவரின் தலைவிதிபோலேநடக்கும்
சதிபதியெனுமிருவர் சஞ்சலத்தையுந்தவிர்க்கும்
இலகியஜேசுவின்றன் இயற்கையெவ்லாம்விளக்கும்
இதுமாயமே யார்க்கும்
பொதுஞாயமே மனம் (கல)

சரணம்

என்னுடன்வந்தேகுகையில் என்மகளைப்போலிருப்பாய்
முன்வினையால்நேர்ந்ததிதை முற்றுமனமேபொறுப்பாய்
தன்மையுறுஜேசுநாதன் தன்னருளாலேபிழைப்பாய்
சந்தோஷமேவரு மென்மேலுமேமனங் (கல)

முனீ. வ-ம்:—அம்மா! பரமபிதா கிருபை பாலிப்பார்! பதியைப் பெற்று பாக்கிய சம்பன்னையாய் பலகாலம் ஜீவிப்பாய். இதோ அடுத்த மலைக்குகையில்தான் எனதிருப்பிடம். சிறிதுகாலம் அங்கு தங்கியிருந்தால் ஆதரவளிக்கிறேன்.

ஞான. வ-ம்:—தங்களிஷ்டம்.

முனீ. வ-ம்:—வாருங்கள் போகலாம். (போகின்றனர்)

(சீன் முடிவு)

சீன்—22. இடம்:—மலைக்குகை.

நடிகர்:—ஞானசௌந்தரி, பிள்ளைகளிருவர், தேவமாதா.

[குகையிலிருந்து ஞானசௌந்தரி தேவதா பிரார்த்தனை செய்தல்]

ஞானசௌந்தரி பாட்டு

(கண்ணனேமணி என்ற மெட்டு)

கண்ணிகள்

கர்த்தனே பரி சுத்தனேஎனைக்
காத்தருள் துயர் தீர்த்தருள்
அத்தனே ஜீவ முத்தனே துன்பம்
அகற்றுவாய் இன்பம் புகட்டுவாய் (க)

தஞ்சமே வுந்தன் தஞ்சமே பெற்ற
தாயிலா பிள்ளை நானுமே
வஞ்சமே னென்மேல் வந்தருள்வனே
வாழ்த்தினேன் தொழு தேற்றினேன் (க)

வ-ம்:—ஆண்டவரே! அகில சராசரத்தையும் படைத்துக் காத்தளிக்கு மகிமை பூண்டவரே; தீன ரட்சண்ய திவ்ய சொரூப தேவ பிதாவே பாபிகளை மன்னிக்கும் சுபாவ முடையவரே. பாபி என்பிழை பொறுக்கப்படாதா. கர்த்தரே; உமது பரிபூரண அன்பிற்குப் பாத்திரமானவர்களில் நானொருவளன்றோ. மென்மேலும் சகிக்க முடியாத துன்பத்தை கொடுத்துத் துயருறச்செய்வது தருமமா; தற்காக்கவேண்டும்.

[மலைவெடித்து தேவமாதா பிரசன்னமாகின்றாள்]

தேவமாதா பாட்டு

(நோட்மெட்டு—கண்ணிகள்)

அஞ்சாதே ஞானசௌந்தரியே
ஆதரிப்பே நான்
தஞ்சமிதோ தந்தே னுந்தன்
சஞ்சலம் தீரவே (அ)

கண்ணே வுன்லைகள் வளருமினி
கர்த்த ராக்கினை
விண்ணுடர் போற்ற வாழ்குலாய்
மெய்யிதுவே கினை (அ)

எந்நாளுங் குறையாத அப்பம்
ஈந்தேன் மைந்தற்கே
பொன்னன கர்த்தர் ஆசீர்வாதம்
புரிவா ருனக்கே (அ)

தேவ. வ-ம்:—அன்பான ஞானசவுந்தரியே அபயாஸ்தங் கொடுத்தேன் அஞ்சாதே! உனது பரிசுத்தமான மனமறியாத பாபிகளுக்குக் கர்த்தர் கடும் சிக்ஷை விதிப்பார். ஆகாயத்தில் பிரகாசிக்கும் நக்ஷத்திரங்களைப்போல் நீ என்றென்றும் உலகில் சுகமாக வாழ்ந்திருப்பாய். பரம பிதாவின் அருமையைப் பூசிக்கும் உனது கரமிரண்டும் முன்போல் வளரவும் உனது பாலர்கள் பசிதணியக் குறையாத அப்பமும் வடியாத ஜலமுங் கொடுத்தேன். சிறிது நேரத்தில் உனது நாதனைக் காண்பாய் தயாநிதியாகிய தேவ பிதாவின் கிருபை உன்னை ரட்சிக்கக் கடவதாக ஆமென்.

[மாதா மறைகின்ருள் ஞானசௌந்தரி கரம் வளரப்பெற்று சந்தோஷித்தல்]

(சீன் முடிவு)

சீன்—23. இடம் :—ராஜமாடி.

நடிகர்:—சிமியோன், பிலேந்திரன்.

[சிமியோன் விசனத்துடன் வீற்றிருக்க பிலேந்திரன் விரைவாக வந்து]

பிலே. வ-ம்:—பிதா! நமஸ்காரம்; என்ன காரணம் எதற்காக வேறுபட்ட முகத்துடன் வீற்றிருக்கின்றீர்.

சிமி. வ-ம்:—வத்ஸா! எந்த! காரணத்தைக் கருதி ஞானசௌந்தரியையும் பிள்ளைகளையும் கொன்றுவிடும்படிக் கடிதமெழுதினுய்.

பிலே. வ-ம்:—ஐயோ இதென்ன அபவாதம் அவ்விதம் நான் கடிதமெழுதவில்லையே.

சிமி. வ-ம்:—இதோ உனது கடிதத்தை நீயே பார்த்துக்கொள் ஆனல் உன் எழுத்தின்படி நான் செய்யாமல் ஞானத்தையும் குழந்தைகளையும் காட்டில்விட்டு வரும்படிக் கட்டளையிட்டேன்.

[பிலேந்திரன் கடிதத்தை வாசித்துப் பார்த்து]

பிலேந்திரன் பாட்டு

(வசனுலே என்ற மெட்டு)

பல்லவி

இனி—நானென் செய்வேன் நாயகிதனைக் காட்டினில்விடுத்த
ஞாயமறியேனே சடிதவு பாயமறியேனே (நா)

அநுபல்லவி

மானினியாள் தனைப்பிரிந்திம் மானிலத்தில் வாழ்வேனே
தானிதற் கோமாலைசூடி தனிவிடுத்தேன் தெய்வமே (நா)

சரணம்

பாலரோடு கானகத்தில் பாவைமனம் வாடியே
சிலனென்னையேசி எங்கு சென்றனளோ ஜேசுவே (நா)

வ-ம்:—தந்தையே! இதேதோ கபடமாகத் தெரிகிறது. ஆண்டவ ரறிய அவ்விதம் நான் கடித மெழுதவில்லை. நமது ஜென்மத்து வேஷிகள் எவரோ இவ்வித மாறுபாடு செய்திருக்கின்றனர். ஐயோ அருமைக்கண்மணி ஆரண்யத்தில் எக்கெதியாகினளோ எவ்விட மேகினளோ கரமற்றவ ளாச்சுதே. ஆ! ஞானம்.

சிமி. வ-ம்:—பிலேந்திரா எல்லாம் தெய்வச் செயலால் நேர்ந்து விட்டது. பரிசுத்த ஜேசுவின் திருவருள் நம்மைப் பாதுகாக்கும். ஞானத்துக்கு எவ்வித கெடுதலும் யேற்படாது நீ உடனே நமது வேலையாட்களுடன் கானகம் சென்று தேடிப்பார்.

(சீன் முடிவு) (போகிருன்)

சீன்:—24. இடம்:—கானகம்.

நடிகர்;—ஞானம், குழந்தைகள், பிலேந்திரன், காவலர்.

பிலேந்திரன் பாட்டு

(தீரதரோமேர என்ற மெட்டு

தேடித்தேடி யலைகின்றேனே எந்தன்
தேவிதனையெங்குங் காணேனே
ஓடிவோடியிங்கு வந்தேனே மாது
உள்ளவிடமும் தெரியேனே
வாடிநின் றேனே
வகையறி யேனே
நாடியசெயல் தெரியேனே எந்தன்
ஞானசுந்தரியைக் காணேனே (தேடி)
இனியேது செய்வேன்
எவ்வித முய்வேன்
அநியாயமிது யார்செய்தாரோ இதற்
காண்டவருஞ் சம்மதித்தாரோ (தேடி)

காவ. வ-ம்:—இளவரசே! அதோ அந்த மலைக்கடுத்த குகையில் நெருப்பெறியும் புகை வருகிறது. குழந்தைகளின் அழுகுரலும் பெண்பேச்சரவமும் கேட்கிறது கவனியுங்கள்.

பிலே. வ-ம்:—ஆம் ஆம்; அங்குசென்று அக்குகைக்குள் யாரிருக்கிறார்களென்று கவனியுங்கள்.

[எல்லோரும் குகைக்கருகில் செல்ல ஞானம் வெளிவரக்கண்டு]

பிலே. வ-ம்:—ஆ! கண்மணி ஞானம்!

ஞான. வ-ம்;—நாதா!

[இருவரும் தழுவிக்கொண்டபின் ஞானம் குழந்தைகளை எடுத்துக் கொடுக்க பிலேந்திரன் வாங்கி முத்தமளிக்கின்றான்]

பிலேந்திரன் ஞானசௌந்தரி தர்க்கம்

(தயைஜூசுட என்ற மெட்டு)

பல்லவி

பிலே.	விடுவாய்மனவிசனம்	பதி	
	விரதாமணியே	மாதே	(விடு)

அநுபல்லவி

கொடிதாமிதுசெயலே	அலங்கோலமாகவே	
கோதிலாத	வேதனருளிது	(விடு)

பல்லவி (ஷை மெட்டு)

ஞான.	தகுமோ அதுகடிதம்	தரச்	
	சரியோ நெறியோ	மன்னா	(தகு)

அநுபல்லவி

பகையென்செய்தேனுமக்கே	இந்தப்படிநீரெழுதிட	
பாலரோடு	கானில்வாடத்	(தகு)

அநுபல்லவி (ஷை மெட்டு)

பிலே.	நிஜமேயிந்தவிதமே	செய்யநினைத்திலேனிது	
	நிகழ்ந்ததறிந்து	விரைந்துவந்தனன்	(விடு)

ஞான. வ-ம்:—நாதா! அன்புடன் என்னிடம் விடைபெற்றுச்சென்று யுத்தத்தில் நற்கீர்த்திவகித்து நகரணுகுஞ் சமயம் எனது பிரசுவ விஷயக் கடிதத்திற்கு அவ்வளவு கடுமையாக எழுதிய காரணம் யாது? அவ்விதம் நானுமக்கு செய்த அபசாரமென்ன?

பிலே. வ-ம்:—கண்ணே! ஞானத்தையும் குழந்தைகளையும் சர்வ ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளுங்கள்: நான் நாளை வருகிறே

னென்று எழுதிய அக்கடிதத்தின் வாசகங்களை எக்கொடியரோ மாறுபாடாக எழுதி இக்கெதிக் காளாக்கினர். தவிர, பரம பிதாவின் ஆணைப்படி நான் உன்னைக் கொல்லும்படி கடிதம் எழுதவில்லை என்பது நிச்சயம். இவ்விஷயத்தை அந்தரங்கமாக வைத்துத் தூதர்கள்மூலம் விசாரித்துத் துப்பறிய வேண்டும். அதிருக்கட்டும்; கண்ணே! உனது கரமிரண்டும் எவ்விதம்வளர்ந்தது நடந்த விவரமென்ன ;

ஞான. வ-ம்:—கொலைஞர்கள் குழந்தைகளுடன் என்னைக் காட்டில் விடுத்தேகிய பின்னர் பலவிதம் பிரலாபிக்குஞ் சமயம் மகான் ஒருவர் பிராப்தமாகி எனக்கு ஆதரவளித்து இக்குகையில் தங்கியிருக்கும்படிச் சொல்லிச்சென்றபின் எனது தியானத்துக் கிரங்கிய தேவமாதா பிராப்தமாகி குறையாக அப்பம் வடியாத ஜலம் கொடுத்துக் கரங்களையும் முன்போலாக்கிச் சென்றனர்.

பிலே. வ-ம்:—பெண்ணே! கடவுள் கிருபையால் இங்ஙனம் யாவும் நடந்தேறிவிட்டது. இதுவொரு நன்மைக்கே காதலி! தர்மராஜ ரானவர் உன்னையும் குழந்தைகளையும் அழைத்துவந்து தம தரண்மனையில் தங்கியிருந்துபசாரம் பெற்றுக்கொள்ளவேண்டு மென்று சொல்லி அனுப்பினர். நகரணுகி தாய் தந்தையரிடம் விடைபெற்றுச் செல்வோம் வா. [போகின்றனர்]

(சீன் முடிவு)

சீன்—25. இடம்:—தர்மர் தர்பார் மண்டபம்.

நடிகர்:—தர்மராஜா, லேனுள், ஞானம், பிள்ளைகள், பிலேந்திரன், பந்துஜனமித்திரர், காவலர்.

[எல்லோரும் அவரவர் ஆசனத்தி லமர்ந் திருத்தல். சகலருக்கும் தருமராஜா உபசாரம் செய்கின்றனர்]

தர். வ-ம்:—இளவரசராகிய பிலேந்திரரே! எனக்கு நேர்ந்த துருக் கிய யுத்தத்தில் வெற்றியைக் கொடுத்த வீரசிங்கமே! உமக்கு நான் செய்யும் கைம்மாறறியேன். பிலேந்திரராஜரே! தமதரு மைப் பாரியாளைப்போல் அங்க அடையாளமும், காருண்ய குணமும் நிறைந்த எனது அன்புக்கினிய ஏகபுத்திரி எக்கார ணமுமில்லாமல் என்னைவிட்டுப் பிரிந்து வெகுநாளாகியது. அக் குழந்தையின் பிரிவாற்றுமையி லிருக்கும் சமயம் அறிந்தே சுல் தான் படையெடுக்கநேர்ந்தது. எனது குழந்தை மனக்கவலையை தமது மனைவி மாற்றிவிட்டாள். யுத்தத்தில் அடைந்த கிலே சத்தை தாம் அகற்றினீர். இந்தப் பேருபகார ஞாபகார்த்த மாக இச சிறந்த ஆபரணங்களைத் தமது மனைவியாகிய எனது மகளுக்குத் தருகின்றேன். தயவுடன் அங்கீகரிக்க வேண்டும்.

[தர்மராஜன் நகைப் பெட்டியைத் திறந்து ஆபரணங்களை எடுக்குஞ்சமயம் ஞானம் அவர்மீது விழுந்து புலம்புதல்]

ஞான. வ-ம்:—ஆ! அப்பா!

தர். வ-ம்:—அம்மா ஞானம்! [இருவரும் ஒன்றுசேர்ந்தபின்]
குழந்தாய் ஞானசௌந்தரி! அம்மா என்கண்மணி! என்னை வேட்டைக்கனுப்பி விட்டிலிருந்த நீ வெளியேறிய விதமெப்படி? அம்மா! பிலேந்திரராஜருக்கு மனைவியாக வாய்த்தவிதமென்ன? இத்தனைகாலம் என்னை மறந்திருந்தாயல்லவா?

[வேனள் எழுந்து மற்றவரறியாதபடி வயிற்றிலடித்துக்கொள்கிருள்]

ஞான. வ-ம்:—தந்தையே! நான் அடையவேண்டிய நன்மையைக் கருதியே இடையில் இத்தீமையெல்லாம் எனக்கு நேரிட்டது போல் தெரிகிறது. சகலருமறிய நான் தங்களைப் பிரிந்த சவிஸ்தாரங்களைச் சொல்லிவருகிறேன் கேளுங்கள்.

ஞானசௌந்தரி அகவல்

தருமமேதவரா தருமாராஜாவே
பெருமையாயென்னைப் பெற்றபிதாவே
காசினிபோற்றுங் காருண்யநாதன்
எசுவின்சாக்ஷியாய் இயம்பிடக்கேளீர்
வேட்டைக்குச்செல்ல விடையதுகேட்க
வாட்டமாய்நானும் வருகுவேனென்று
சிற்றன்னையுடனே செல்வியேயிருவென
சித்தமேமகிழ்ந்து சென்றதின்பின்பு
மனமிகவாடி மயங்கியேபடுத்தேன்
சினமுடன்வந்து சீறியேனின்று
அடித்துவுதைத்து அடாததோர்வேலை
கொடுத்துசெய்யென்றே கொடுமையேபுரிந்தாள்,
மயங்கிநான்படுக்க மயக்கமும்கொடுத்து
பயங்கரக்காட்டில் பழிகாரர்தன்னால்
கொண்டுபோய்க்கொல்ல கொடுத்தனள்பணமும்
கண்டுநான்புலம்பக் கைகளையிழந்தேன்
இம்மகாராஜர் எனையங்குகண்டு
சம்மதிகொண்டு சதுர்மணம்செய்தார்
துணைவந்தபின்னே சுதர்தமையீன்றேன்
சுதனமென்னைக்காட்டில் தந்தையார்விடுத்தார்,
முனிவரைக்கண்டு முகமுமலர்ந்து
வினையதுபோக வேதமாதாவும்
தரிசனத்தால் சகலருஞ்சேர்ந்தோம்
தெரிகுவீரெந்தன் சேதியாமிதுவே.

தர்மர் பாட்டு

(இப்படியடிப்பித்தாளு என்ற மெட்டு)

பல்லவி

இப்படிசெய்திடலாமா தப்பிலியேநீ
என்முன்னே இருக்கலாமா (இப்)

அநுபல்லவி

அப்பொழுதறிந்திருந்தால் ஆவியைமடிப்பேனடி
தப்பிதமொழிபுகன்ற சண்டாளிசண்டாளிநீயே (இப்)

சரணம்

கொஞ்சமுந்தயையிலாத வஞ்சகியுந்தனையிப்போ
கொல்வதேதெய்வசம்மதம் நல்லதோநீசெய்தவிதம் (இப்)

தர். வ-ம்:—அடி துன்மார்க்கி! என்னசெய்தாய் வஞ்சகக்காரி! இவ்வித அலங்கோலத்துக்கு என் குழந்தையை ஆளாக்கிவிட்டு என்னிடம் என்ன சாகஸம் செய்தாய்? பிரஷ்டி! உன்னை எவ்வித கொடிய தண்டனைக்குட்படுத்தினாலும் கடவுள் எங்களைக் கோபிக்கமாட்டார். தெய்வத் திருவுள்ளத்துக் கடுக்காத செய்கைக்குடன்பட்ட ஜெகஜாலி உன்னை என்னசெய்கின்றேன் பார். அடே காவலா! இவளைக் கொலையாளிகளிடம் ஒப்புவித்து இவள் தேகத்தை சித்ரவதைசெய்து கால்வேறு, கரம்வேறு, உடல்வேறு, தலைவேறாகச் சிதைத்து ஊரிலுள்ளாரறிய காக்கை கழுகு; நாய், நரிகளுக்கு விருந்திடச் சொல்லுங்கள்.

ஞான. வ-ம்:—பிதா! சற்று நிதானிக்கவேண்டும். சிற்றன்னையைத் தாங்கள் குற்றங்கூறுவது தகாது. அவ்வம்மை இவ்விதம் செய்திராவிடில் தேவமாதாவை நான் தெரிசிக்க நேருமா? இம் மகாராஜரை மணஞ்செய்ய யேலுமா? இவையனைத்தும் தெய்வ கிருபையால் நானனுபவிக்க நேர்ந்த நன்மை தீமையேயாம். ஆகவே, அவர்களுக்கிட்ட ஆக்கினையை மீட்டுக்கொள்வதுடன் பழையபடி அவ்வம்மையை அங்கீகரிக்கவும் வேண்டுகிறேன்.

பிலே. வ-ம்:—அவ்விதம் செய்வதே வேதமுறையாகும். பாவம் செய்தவர்களைப் பரமபிதா தண்டித்துக்கொள்கிறார்.

தர். வ-ம்:—நல்லது; உங்கள் சொற்படியே லேனாளுக் கிட்ட ஆக்கினையை மீட்டுக்கொண்டேன். பிலேந்திரரே! எனது ராஜ்ஜியத்தை என் குழந்தைக்கு சீதனமாகக் கொடுக்கின்றேன். ஆதலின் தாமே இந்தப்பட்டத்தை யேற்று அரசாக்ஷி செய்ய வேண்டும். [லேனாள் முன்வந்து]

பிலே. வ-ம்:—சித்தப்படியே ஆகட்டும்.

லேனு. வ-ம்:—ஒன்றை நினைக்க ஒன்று நேர்வது உலக வழக்கம் தான். ஆயினும். எனது அருமைச் சகோதரிகளுக்கு இம் மகா சபையில் நானொன்று சொல்ல விரும்புகிறேன்.

லேனுள் சிந்து

என்னருஞ் சகோதரிகளே நமது
ஏசுநாதன்திருவருட் கிருபையினுல்

மன்னன்தர்ம ராஜன் தன்னையே நானும்
மாலையிட்டகாலமுதல் நாளிதுவரை

சக்களத்தி பெற்றமகளாம் ஞான
சௌந்தரியாள்மீது கவுந்தகமாய்

ஆசைவிசு வாசமுடனே பார்த்து
ஆனமனையாட்டியென்னை யேசிவரவும்

ரோஷமெனக் குண்டாச்சுது அதனுல்
நொந்துமனம்சுந்தரியை பந்தமாக்கவே

கொடுமைமிகவும் புரிந்தே அவனை
கொல்லமழுவரிடம் சொல்லியேவிட்டேன்

பாவியவர் செய்தசூதால் ஞானம்
பார்தனிலுயிர் தப்பித்து பாலரைபெற்று

தேவமாது தன்னைசேவித்தாள் நான்செய்த
சேட்டையெல்லாம்மூட்டையாக ஒன்றுசேர்ந்து

வந்துயென்னை சுற்றிக்கொண்டது சுந்தரி
வஞ்சகத்தையெண்ணுமலென் சஞ்சலந்தீர்த்தாள்

என்னைப்போன்ற கன்னியர்களே நீங்கள்
எள்ளளவும்பிள்ளை துரோகம் செய்யவேவேண்டாம்

சாட்சியென்னைப் பார்த்துக்கொள்ளுங்கள் உங்கள்
சக்களத்திப்பிள்ளைகளைக் காத்துவாருங்கள்

ஆக்ஷியுடன்மாக்ஷிபெருகும் தேவன்
அன்புதவியென்றுமும்மைத் தென்புடன்காக்கும் (என்

லேனு. வ-ம்:—சகோதரிகளே! தாய்மார்களே! "குற்றம் பார்க்கிற் சுற்றமில்லை" என்னும் நீதி வாக்கியப்படி இம் மகாசபையில் வீற்றிருக்கும் நீங்கள் யாவரும் எனது குற்றத்தை மன்னித்துக் கூறுவதைக் கேட்கக் கோருகிறேன். அதாவது, இந்த நமது தேசமானது விசாலமாகப் படர்ந்து, பலவளஞ்செழிந்து, பரம பிதாவின் கிருபை நிறைந்து தழைத்தோங்கப்பெற்ற எருசலேம் என்னும் ராஜதானிக்கு இருகண்களாகப் பொலிந்து ஜொலிக் கும் பிரதான நகரமானது "ரோமாபுரி" யாகும்.

இந்த ரோமாபுரிக்கு அரசரானவரும், தருமசீல தயாளகுண சம்பன்னருமானவரே எனது பர்த்தாவாகும். அவருக்கு நான் இளைய தாரமாக வாழ்க்கைப்பட்டவள் என்பது நீங்களறிந்ததே.

ஏற்கெனவே எனது பிராணபதிக்கு மூத்தவளாய் வாழ்க்கைப்பட்ட எனது சக்களத்திக்கோர் பெண்மகள் பிறந்து அவளது இளம் பருவத்தில் தன் தாயைத் துறந்து எனது பாதுகாப்பின் மகளான ஞானசௌந்தரியும் இதோ நமது முன் நிற்கின்றாள்.

எனது அதிஷ்டானுபவப்படி என் வயிற்றிற் பிள்ளை பிறக்காவிடினும் முன் சொன்ன எனது ஞானசௌந்தரியை என் பிள்ளையைப்போல் எண்ணியே சகலவிதத்திலும் சஞ்சலமின்றி சந்தோஷமாகவே போஷித்து பாதுகாத்துவந்தேன்.

இருக்கினும், ''கடந்த ஞானியும் மறப்பரோ மக்கள்மேற் காதல்'' என்றபடி எனது நாயகர் தனது மகள்மேல்வைத்த அன்பு மாறுது. எவ்விஷயத்திலும் என்னைப் பராமரிக்கை செய்துவந்தார். இவரது குணானுபவத்தை முன்னிட்டே குழந்தை ஞானசௌந்தரியை நான் கொடுமைசெய்ய முற்பட்டேன்.

கணவர் எனக்குச் செய்த கடின சிக்ஷைக்காக கணவருக்கு நான் கடுமையான கொடுஞ்செயல் புரியவேண்டியது ஞாயமே. தவிர, சக்களத்தி மகளுக்கு நான் செய்தது சந்தாற்பானுசார விதிவழி மதிப்போக்கின் தன்மையேயாகும்.

எவ்வளவு நான் கொடுமை செய்தபோதிலும், பொறுமையிற் சிறந்த பூஷணமாகிய ஞானசௌந்தரியின் உத்தமகுணமே, நான் செய்த சகலவித தீங்கினின்றுந் தப்பிப் பிழைக்கும் மார்க்கத்தைக் காட்டியது.

இதோ நிற்கும் ஞானசௌந்தரி என்னும் என்குமாரியால் எனக்கு எவ்வித தீங்கும் ஏற்படவில்லை என்பதை உங்கள் முன்னிலையில் உண்மையாய்ச் சொல்லுவேன். கணவனுலேற்பட்ட கலக்கமே இக் குழந்தையை நான் இவ்விதம் செய்ய நேர்ந்ததென்பதைத் தெளிவாக நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதில்லை.

எனினும், பர்த்தாவை முன்னிட்டு சக்களத்தி பிள்ளைக்கு நான் செய்தது பழியேயாகும். அப்பழிக்காகவே பரமபிதாவானவர் இவ்வித அவமானமடையும்படி இச்சபையோர்முன் என்னை நிறுத்தித் தண்டித்தார். ஆகவே, என்போன்ற பெண்மக்கள் இனியேனும் முக்கியமாக கவனிக்கும் ஓர் விஷயத்தைச் சொல்லுகிறேன்.

அதாவது, பெண்ணாய்ப் பிறந்திடில் என்றேனும் ஓராடவருக்கு வாழ்க்கைப்படுவது நிச்சயம். அவ்வித வாழ்க்கையில் முதல் தாரமே சிலாக்கியமாகும் இரண்டாந் தாரமாகவும், மூன்றாந் தாரமாகவும் வாழ்க்கைப்பட நேரில், பிள்ளையில்லாத வீட்டில் புகுவதே உத்தமம்.

மூத்ததாரத்துக்குப் பிள்ளையிருக்க இளைய தாரமாக நாம் வாழ்க்கைப்படும பாக்கியத்தைப் பகவான் நமக்குக் கொடுத்திருக்கில், அப்பிள்ளையை நம் பிள்ளையாகப் பாவித்து வாழவேண்டுவதே நமது கடமையாகும்!

தவறினல், இது சமயம் உங்களது கண்முன் நானடைந்த அவமானத்தைவிடப் பதின்மடங் கதிகமான அவமான அபகீர்த்திக்காளாவதுடன் பரமபிதாவின் பாததெரிசனத்திற்கும் ஆளாகிப் பாபிகளாவீர்கள் என்பது உண்மை. [ஓர் புறம் நிற்கிறுள்]

ஞான. வ-ம்:—தாயே! விசனிக்கவேண்டாம். எல்லாம் நமது வினைப் பயனின் விளையாட்டேயாகும். நடந்ததை நினையாது நடக்குமவற்றை யோசிப்பதே நமது கடமை. நமது அரசாங்க அதிகாரத்தோரணைக்கோரி லக்கியமான இக்கதைக்குப் பக்கத்துணையிருந்து பரமபிதாவாகிய கர்த்தர் நம்மைப் பாதுகாப்பாராக.

தர். வ-ம்:—ஆமென்.

சகலரும் பாடுதல்

(விளக்கிடுமீனுக்ஷி என்ற மெட்டு)

அருள் தரும்பரமபிதாவை போற்றுவோம் ஆனந்தமான
அம்மைமாரித்தாயை வாழ்த்துவோம் (அரு)

தருமசொரூபமே தானம்ப்ரதாபமே
சன்மார்க்கசங்கீதமே எவர்க்கும் சன்மார்க்கசங்கீதமே
பொருள்பெருங்கிறிஸ்துவம் போற்றியதத்துவம்

புவிமீது மறையாது புகழோங்கவே
பொன்பெருஞ் சங்கர லிங்கனுக்ஷிதாங்கவே (அரு)

சுபம்! சுபம்!! சுபம்!!!

நாடகம் முற்றுப் பெற்றன.

திருமகள் விலாச அச்சு நிலையம், சென்னை:—1954.

Y351:c5

சங்கீத சாஹித்திய சந்தவண்ணச் சர

ச. சு. சங்கரலிங்கக் கவிராயர்

புதிய டிராமா சரித்திரங்கள்

		ரூ.	அ.
கோவலன் சரித்திரம்	...	0	12
நல்லதங்காள் சரித்திரம்	...	0	12
லவிதாங்கி சரித்திரம்	...	0	12
ஸ்ரீ பாமா விஜயம்	...	0	12
பாதுகா பட்டாபிஷேகம்	...	0	12
ஸ்ரீ ராமதாஸ் சரித்திரம்	...	0	12
தூக்கு தூக்கி சரித்திரம்	...	0	12
சத்தியவான்-சாவித்திரி	...	0	12
நந்தனர் சரித்திரம்	...	0	12
சகுந்தலா	...	0	12
காலவரிஷி	...	0	12
சிறுத்தொண்டன்	...	0	12
மார்க்கண்டேயர்	...	0	12
குலேபகாவலி	...	0	12
பீஷ்மர் பிரதிக்ஞை	...	0	12
சக்குபாய்	...	0	12
பட்டினத்தார்	...	0	12
துருவ சரித்திரம்	...	0	12
பவளக்கொடி சரித்திரம்	...	0	12
ஞானசௌந்தரி சரித்திரம்	...	0	12
சம்பூரண இராமநாடகம் (ஏகை. சிவஷண்முகம் பிள்ளை இயற்றியது)		3	8
சர்வ சமய சமரசக் கீர்த்தனை (வேதநாயகம் பிள்ளை)		1	8
நந்தனார் சரித்திரக் கீர்த்தனை (கோபால கிருஷ்ண பாரதியார்,		1	8
இராமநாடகக் கீர்த்தனை; (சீகாழி அருணாசலக் கவிராயர்) ஆப்டோன் படங்களுடன் கூடியது. கிளேஸ் கடிதம் புதிய பதிப்பு		4	0
தியாகராய அய்யரவாள் கீர்த்தனைகள் (600)		5	0
தியாகராய அய்யரவாள் கீர்த்தனைகள் (200)		1	0

கிடைக்குமிடம்:—B. இரத்தின நாயகர் அண்டு சன்ஸ்,
நெ. 57, வெங்கட்ராமய்யர் தெரு, சென்னை—1.